# THE COVAI MAIL

RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

Vol No. : 8 Issue No. : 24 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Sep 12 - 18, 2021, 8 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-



VELAMMAL Bodhi Campus CBSE - NEET / IIT JEE SCHOOL

vblive POWERED BY VELAMMAL Your Online Tutor For ONLINE program anywhere in Tamil Nadu




# கோவைக்கு கிடைக்குமா மாநிலங்களவை உறுப்பினர் பதவி?

சாணக்கியன்
தி கோவை மெயில்

கொங்கு மண்டலத்தின் தலைநகரான கோவை மாவட்டத்தில் யார் முகத்தை முன்னிலைப்படுத்துவது என்று திமுக தவிக்கிறதா? அல்லது முகமில்லாமல் தவிக்கிறதா? என்பது புரியாத புதிராக உள்ளது.

திமுக சந்தித்த 1957 பேரவைத் தேர்தலில் இருந்தே கொங்கு மண்டலம் திமுகவுக்கு சவாலான பகுதியாகவே இருந்து வருகிறது. அதுவும் கொங்கு மண்டலத்தின் பிற பகுதிகளை ஒப்பிடும்போது கோவை மாவட்டம் எப்போதும் சவால் தான்.

ஒருங்கிணைந்த கோவை மாவட்டச் செயலராக கோவை செழியன் காலத்திலும் சரி, அமைச்சர்களாக கோலோச்சிய மு.கண்ணப்பன், பொங்கலூர் நா.பழனிசாமி காலத்திலும் சரி திமுக நிலைமை இது தான். தமிழகத்தின் பிற மாவட்டங்களை ஒப்பிடும்போது கோவை மாவட்டம் சற்று வித்தியாசமான பகுதியாக இருப்பதும், அதற்கேற்ற வகையில் திமுக வியூகம் வகுத்து செயல்படாததும் தான் இங்கு திமுகவின் வெற்றிக்கொடியை நாட்ட முடியவில்லை என்கின்றனர் அரசியல் திறனாய்வாளர்கள்.

1996 சட்டப்பேரவைத் தேர்தலில், கோவையை முழுவதுமாகக் கைப்பற்றிய தி.மு.கவால் அதன் பிறகு நடந்த ஐந்து தேர்தல்களில் பாதித் தொகுதிகளைக்கூட வெல்ல முடியவில்லை. அத்தேர்தலில் ஜி.கே. மூப்பனாரின் தமாகா, இடதுசாரிகள் கூட்டணி இருந்ததால் திமுகவால் எளிதாக வெல்ல முடிந்தது. அதன்பிறகு வந்த பேரவைத் தேர்தல்களில் அதாவது கால் நூற்றாண்டாக திமுக கோவை மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற முடியவில்லை.

நடந்து முடிந்த பேரவைத் தேர்தலில் தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் தி.மு.க வெற்றி பெற்றிருந்தாலும், கொங்கு மண்டலத்தை மீண்டும் கைப்பற்றி அ.தி.மு.க வலுவான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளது. ஜெயலலிதா மறைவுக்குப் பிறகும் அ.தி.மு.க இங்கு வலிமையுடன் இருப்பது பலருக்கும் ஆச்சர்யத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்திருக்கிறது.

முக்கியமாக கோவை மாவட்டத்திலுள்ள 10 தொகுதிகளிலும் அ.தி.மு.க கூட்டணி வென்று சாதனை படைத்துள்ளது. கோவையை முழுவதுமாக இழப்பது தி.மு.கவுக்கு முதன்முறை இல்லை. கடந்த ஐந்து சட்டப்பேரவைத் தேர்தல்களாகவே தி.மு.க கோவை மாவட்டத்தை இழந்துதான் வருகிறது.

2006 சட்டப்பேரவைத் தேர்தலில் மீண்டும் ஆட்சி அமைத்தாலும், கோவை மாவட்டத்தில் இரண்டு தொகுதிகளை மட்டுமே தி.மு.க கைப்பற்றியது. 2011 பேரவைத் தேர்தலில் கோவையில் மீண்டும் முழு வெற்றிபெற்றது அ.தி.மு.க. 2016 பேரவைத் தேர்தலில் ஒரு தொகுதியை மட்டும் தி.மு.க கைப்பற்றியது. 2021 பேரவைத் தேர்தலில் அதுவுமில்லை.

2019 மக்களவைத் தேர்தலில் கோவை உள்ளிட்ட கொங்கு மண்டலம் முழுவதும் தி.மு.க முழுவெற்றியைப் பெற்றது. அ.தி.மு.க அமைச்சர்களின் தொகுதிகளிலேயே தி.மு.க தான் முன்னிலை வகித்தது. நாட்டிலேயே பாஜகவை வீழ்த்திய ஒரே கம்யூனிஸ்ட் என்ற பெருமையுடன் கோவை எம்.பியாக இருக்கிறார் பி.ஆர். நடராஜன்.

தற்போதைய தேர்தலில்கூட கோவை தெற்கு, பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, மேட்டுப்பாளையம், கோவை வடக்கு போன்ற தொகுதிகளில் சுமார் 5,000 வாக்குகளுக்குள்தான் வித்தியாசம். கோவை வடக்குத் தொகுதியைத் தவிர மற்ற நான்கு தொகுதிகளில் 1,000 முதல் 2,000 வாக்குகள்தான் வித்தியாசம். இங்கு திமுகவினர் இன்னும் இறங்கி களப்பணியாற்றியிருந்தால் முடிவுகள் மாறியிருக்கும் என்ற எண்ணம் எழுகிறது.

இதற்கு அ.தி.மு.க வைப்போல வலுவான தலைவர்கள் இல்லாமல் இருப்பதே தி.மு.கவுக்கு இங்கு பெரிய பின்னடைவாக இருக்கிறது என்று அரசியல் ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

கோவை மாவட்ட திமுகவில் உள்கட்சிப் பூசலும் பூகம்பமாக வெடித்து கொண்டேதான் இருக்கும். மற்ற கட்சிகளிலும் உட்கட்சிப் பூசல்கள் இருக்கத்தான் செய்யும். அதைக் கட்டுப்படுத்தத்தான் தலைவர்கள் இருப்பர். ஆனால், கோவை தி.மு.கவில் உட்கட்சிப் பூசலுக்கு காரணமே அந்தத் தலைவர்கள் தான் என்று கூறப்படுகிறது. இந்நிலையில் தான் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் கோவையை 5 மாவட்டங்களாகப் பிரித்து திமுகவில் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

கோவை வடக்கு மாவட்ட பொறுப்பாளராக சி.ஆர். ராமச்சந்திரன், கோவை தெற்கு மாவட்ட பொறுப்பாளராக தென்றல் செல்வராஜ், கோவை கிழக்கு மாவட்ட பொறுப்பாளராக எஸ்.சேனாதிபதி, கோவை மாநகர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளராக நா.கார்த்திக், கோவை மாநகர் மேற்கு மாவட்ட பொறுப்பாளராக பையா (எ) ஆர்.கிருஷ்ணன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

இருப்பினும், கடந்த பேரவைத் தேர்தலுக்கு முன்புவரை மக்களிடம் இறங்கி அரசியல் செய்ய தலைவர்களும் தொண்டர்களும் முன்வரவில்லை என்று தோன்றுகிறது. அதை அ.தி.மு.க சரியாகப் பயன்படுத்திக்கொண்டது. ஒவ்வொரு தெருவிலும் அ.தி.மு.கவினர் மக்களிடம் இறங்கிப் பழகினர். ஆனால், தி.மு.கவினருக்கு அந்த மந்திரம் தெரியவில்லை. இதனால் எந்தவிதத்திலும் தி.மு.கவினால், அ.தி.மு.கவை வீழ்த்த முடியவில்லை. கடந்த சில ஆண்டுகளாக சில தொகுதிகளில் மட்டுமே தி.மு.க வேட்பாளர்கள் களப்பணி செய்துள்ளனர்.

பெரும்பாலான இடங்களில் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் தான் அவர்கள் களத்துக்கே வந்தனர். பல பகுதிகளில் உட்கட்சிப் பூசலையும், பணப் பிரச்சினையையும் தி.மு.க சரிகட்டுவதற்குள் தேர்தல் முடிந்துவிட்டது.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், இளைஞரணி செயலாளராக இருந்த காலத்திலேயே கோவை மாவட்டத்தில் உள்ள கோஷ்டி பூசலை ஒழிக்க பல வகைகளில் முயற்சித்தார். அனைத்து தரப்பையும் ஒன்றுபடுத்தி கட்சியை வளர்க்க கடும் முயற்சி மேற்கொண்டார். எத்தனையோ முறை சமரசமும் செய்துள்ளார். ஆனால் எதற்கும் மசியவில்லை கோவை மாவட்ட திமுகவினர். பொங்கலூர் பழனிசாமியால் கட்சி மாவட்டத்தில் நலிவடைந்துள்ளது, அவரிடம் இருக்கும் பொறுப்பைப் பறித்தால் கோவை மாவட்டத்தில் திமுகவை ஆஹா, ஓஹோவென வளர்ப்போம் என பேசியவர்கள் நடந்து முடிந்த பேரவைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியால் துவண்டுபோய் விட்டனர்.

எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தலில் கோவையில் திமுக மேயர் வேட்பாளராக வருபவர் கோவை மாவட்ட திமுக முகமாக மாற வாய்ப்புள்ளதால் அதை மொழிவழி சிறுபான்மையினரில் ஒருவருக்கு திமுக தலைமை ஒதுக்கினால் திமுகவை கோவை மாவட்டத்தில் மேலும் வளர்த்தெடுக்க முடியும். அதேபோல இப்போது அறிவிக்கப்பட்டுள்ள 2 மாநிலங்களவை உறுப்பினர் பதவிகளில் ஒரு பதவியை கோவையைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்குவதும் கோவையில் திமுகவை வென்றெடுக்க உதவும் என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.

**எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தலில் கோவையில் திமுக மேயர் வேட்பாளராக வருபவர் கோவை மாவட்ட திமுக முகமாக மாற வாய்ப்புள்ளதால் அதை மொழிவழி சிறுபான்மையினரில் ஒருவருக்கு ஒதுக்கினால் திமுகவை கோவை மாவட்டத்தில் மேலும் வளர்த்தெடுக்க முடியும்.**



### மென்மையான முகத்தை முன்னிறுத்துவது அவசியம்

**இது குறித்து அரசியல் விமர்சகர் ரிஷி கூறும்போது,** கொங்கு மண்டலத்தில் மென்மையான இந்துத்துவா உணர்வு அனைத்துத் தரப்பு மக்களிடமும் உள்ளது. குறிப்பாக ஜெயலலிதா உயிரோடு இருந்தவரை அங்குள்ள மொழிவழி சிறுபான்மையினர், அருந்ததியர் ஒருங்கிணைந்து ஓட்டுப்போட்டு அதிமுகவை வெற்றிப்பெற செய்தனர்.

குறிப்பாக கோவை மாவட்ட அரசியலில் முக்கிய திருப்புமுனையாக இருந்தது 1998 குண்டு வெடிப்பு சம்பவம். இதன் விளைவு அனைத்துத் தரப்பு மக்களுக்கும் இந்துத்துவா உணர்வு அதிகரித்துவிட்டது. இதன் விளைவாகவே அதன்பிறகு நடந்த அனைத்துப் பேரவைத் தேர்தல்களிலும் திமுக தோல்வி அடைந்தது. அந்த மக்களுக்கு பாஜக, அதிமுக ஆகிய இரு கட்சிகள் மீது நம்பிக்கை பிறந்தது.

இதை உடைப்பதற்கு திமுகவில் மென்மையான இந்துத்துவா உணர்வுகொண்ட சமூக கட்டமைப்பைச் செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது. எதிர்வரும் மேயர் தேர்தலில் திமுக கொள்கைகளை முன்னிறுத்தாமல், வளர்ச்சி, அதிமுகவின் ஆதிக்கம் ஆகிய இரு புள்ளிகளை மட்டுமே மையமாக வைத்து ஒரு மென்மையான முகத்தை முன்னிறுத்தினால் அது திமுகவுக்கு வலுசேர்க்கும்.

மேலும், அண்மையில் நடந்த சில சம்பவங்கள், அதிமுகவினரை சற்றே கதிகலங்க செய்துள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி கட்சியை வலுப்படுத்தினால் தான் திமுக அடுத்தப் பேரவைத் தேர்தலில் கோவையில் வெற்றிக்கொடியை நாட்ட முடியும். குறிப்பாக கருணாநிதி காலத்தில் காங்கிரஸ் அல்லது தமாகா கூட்டணி பலத்தை நம்பியே கொங்கு மண்டலத்தில் களமாடுவார். ஆனால், ஸ்டாலினோ கட்சியை வலுப்படுத்த வேண்டும் என்ற புள்ளியில் நகர்வதால் கோவை மாவட்டத்தில் சில மாறுதல்கள் அதிவிரைவில் வரும் என தெரிகிறது என்றார் ரிஷி.

---

பெட்ரோல் மற்றும் பேட்டரி மூலம் இயங்கும் வாகனம்

## ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி மாணவர்கள் சாதனை




ஹைபிரிட் ஸ்கூட்டர் உயர் தொழில்நுட்ப இருசக்கர வாகனம் அறிமுக விழாவின் போது.

தி கோவை மெயில்

ஸ்ரீராமகிருஷ்ணா தொழில்நுட்பக் கல்லூரியின் இயந்திரவியல், மின்னியல், மற்றும் தொடர்பியல் துறை சார்ந்த இறுதி ஆண்டு மற்றும் முன்னாள் மாணவர்கள் பேட்டரி மற்றும் பெட்ரோல் மூலமாக இயங்கக்கூடிய இருசக்கர வாகனத்தை தயாரிக்கும் முயற்சியில் வெற்றி கண்டு சாதனை படைத்துள்ளனர்.

இந்த இரு சக்கர வாகனத்தில் பேட்டரி மூலமாகவோ அல்லது பெட்ரோல் மூலமாகவோ வாகனத்தை இயக்கிக் கொள்ளலாம். ஒருமுறை சார்ஜ் செய்தால், பேட்டரி மூலம் சுமார் மணிக்கு 65 கிலோ மீட்டர் வேகத்தில், 100 கிலோ மீட்டர் வரை செல்லக்கூடியது. மேலும் பேட்டரியில் இருந்து பெட்ரோலுக்கும், பெட்ரோலில் இருந்து பேட்டரிக்கும் எளிய வகையில் மாறும்படி இந்த வாகனம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த தொழில்நுட்பத்தை அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் "மெக்கட்ரான் மோட்டார்ஸ்" என்ற ஸ்டார்ட் ஆப் ஆக நிறுவ மாணவர்களும் ஆசிரியர்களும் விரும்பினர். இந்த மெக்கட்ரான் மோட்டார்ஸ் என்ற ஸ்டார்ட் அப் தொடக்க விழாவும், ஹைபிரிட் ஸ்கூட்டர் உயர் தொழில்நுட்ப இருசக்கர வாகனம் அறிமுக விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்த விழாவிற்கு (Green-era Energy India Pvt Ltd) நிறுவனத்தைச் சார்ந்த வள்ளியப்பன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். மேலும் கல்லூரி முதல்வர் பால்ராஜ் கண்டுபிடிப்புகளின் அவசியம் மற்றும் அதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

இறுதியாக மெக்கட்ரான் மோட்டார்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் வீரக்குமார் நன்றியுரை வழங்கினார். நிறுவனத்தைச் சார்ந்த தலைமை நிர்வாக அதிகாரி சேது மாதவன் நிறுவனத்தின் ஆரம்பம், நோக்கம் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து விவரித்தார்.

## புரிந்துணர்வு ஒப்பந்தம்



இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி, இன்ஸ்டிடியூட் ஆப் காஸ்ட் அக்கவுண்ட்ஸ் ஆப் இந்தியா உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. (இடமிருந்து) கல்லூரியின் முதல்வர் பொன்னுசாமி, இந்துஸ்தான் கல்வி நிறுவனங்களின் செயலர் பிரியா சதீஷ் பிரபு, அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன், கோவை மாவட்ட ICMAI தலைவர் மதன கோபால்.

## கற்பகம் உயர்கல்விக்கழக முதலாமாண்டு மாணவர்கள் வரவேற்பு விழா

கற்பகம் உயர்கல்விக் கழக கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலத்தின் இளநிலை மற்றும் முதுநிலை முதலாமாண்டு மாணவர்களுக்கான வரவேற்பு விழாவும், அறிமுக வகுப்புகளுக் கான தொடக்க விழாவும் நடைபெற்றது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் சேது.சுடலை முத்து விழாவுக்குத் தலைமை வகித்தார். பதிவாளர் பழனிசாமி வாழ்த்துரை வழங்கினார். காகனிசன்ட் நிறுவன இயக்குநர் அகஸ்டின் கனகசபாபதி சிறப்புரையாற்றினார். 'கல்லூரிக் காலம் என்பது, கனவுகள் காண மட்டுமன்று. பொறுப்புகளைச் சுமக்கிற அளவில் மாணவர்கள் தம்மைத் தாமே உருவாக்கிக் கொள்ள முனைய வேண்டிய காலம். இப்பருவத்தில் வாய்ப்புகளை முறையாகப் பயன்படுத்திக் கொண்டால், வாழ்க்கை வளமாகும். வாழ்க்கை பிறருக்கு வரலாறாகும்' என்றார்.



வரவேற்பு நிகழ்ச்சியில் குத்து விளக்கேற்றும் முதலாமாண்டு மாணவி. அருகில் கற்பகம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சேது.சுடலை முத்து, கலை அறிவியல் கல்லூரி டீன் பாலாஜி, பதிவாளர் பழனிசாமி.

அனைத்துத் துறைகளிலும் தொழில்நுட்ப வளர்ச்சி சார்ந்த வேலைவாய்ப்புகள் பெருகி இருப்பதை பற்றிக் கூறினார். அவ்வாய்ப்புகளை வெற்றி வாய்ப்புகளாக அமைத்துக் கொள்வதற்கு மாணவர்களிடம் குறையாத ஆர்வமும், தன்னம்பிக்கையும், தொடர் முயற்சியும், காலமேலாண்மை முதலான ஆளுமைத் திறன் மேம்பாடும் அமைய வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தினார்.

## இந்தியாவில் ஃபோர்டு கார் உற்பத்தி விரைவில் நிறுத்தம்

தி கோவை மெயில்

அமெரிக்காவைச் சேர்ந்த முன்னணி வாகன நிறுவனமான ஃபோர்டு (ford), இந்தியாவில் சென்னையிலும், குஜராத் மாநிலத்தின் சனந்த் நகரிலும் வாகன உற்பத்தி ஆலையை நடத்தி வருகிறது. இந்நிலையில் இந்தியாவில் ஃபோர்டு மோட்டார் நிறுவனங்களை மூட அந்நிறுவனம் முடிவு எடுத்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. ஃபோர்டு நிறுவனம் நஷ்டத்தில் இயங்கிருவதாகவும் எனவே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இருப்பினும், இந்தியாவில் இறக்குமதியின் மூலம் கார்கள் விற்பனை செய்யப்படும் என செய்தி வெளியாகியுள்ளது. அந்தவகையில், காரை ஏற்கனவே வாங்கிய வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து சேவை அளிக்கப்படவுள்ளது. இதுகுறித்து அதிகாரப்பூர்வ தகவலை ஃபோர்டு நிறுவனம் இன்னும் வெளியிடவில்லை.

ஃபோர்டு ஆலைகள் மூடப்படுவதால் சுமார் 4000 தொழிலாளர்கள் வேலை இழப்பார்கள்.

Sree Annapoorna Sree Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

THE COVAI MAIL
RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேட்டரிங்

Vol No. : 8 Issue No. : 24 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Sep 12 - 18, 2021, 8 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-

# உயர்வோம்... உயர்த்துவோம்!



## - விஜய் மோகன், நிறுவனர், பிரிக்கால்

கோவையை மையமாக கொண்டு இன்று பெரிய அளவில் வளர்ந்துள்ள பொறியியல் சார்ந்த பெரும் நிறுவனங்கள் பல இருந்தாலும், பல ஆண்டுகளாய் அனைவரும் வியந்து பார்க்கும் நிறுவனமாக பிரிக்கால் லிமிடெட் திகழ்கிறது என்றால், அதற்கு மாற்றுக்கருத்து கிடையாது

ஆட்டோமொபைல் துறைக்கான உதிரி பாகங்களை செய்யும் துறையில் கால்பதித்து 45 வருடங்களைத் தாண்டி இன்று 45 நாடுகளில் தனக்கான இடத்தைப் பெரிதளவில் தக்கவைத்துள்ளது பிரிக்கால்.

'பையன் பிரிக்கால் நிறுவனத்தில் வேலைப்பார்ப்பவராக இருந்தாலே போதும், திருமணத்திற்கு பெண் கேட்டால் உடனே கொடுத்து விடுவார்கள்' என்று கோவையில் உள்ள பலரும் இந்த நிறுவனத்தைப் பற்றி சொல்வதை நம்மில் பலரும் கேட்டிருப்போம். அரசுத் துறையில் பணிபுரிபவர்கள் போல் இங்கு பணிபுரிபவர்கள் தங்களின் நிறுவனத்தை அவ்வளவு பெருமையாக சொல்லிக்கொள்வார்கள், இந்நிறுவனம் அத்தகைய சிறப்பை கொண்டதாக இருந்து வருகிறது.

இப்படி ஒரு நிறுவனம் தோன்றக் காரணமாக இருந்தவர் அதன் நிறுவனர் விஜய் மோகன். பொறியியல் மாணவராக அவர் கற்ற பாடங்களையும், தொழில்முனைவோராக கடந்து வந்த பாதையையும் இந்த தேசிய பொறியாளர்கள் தினத்தை (செப்டம்பர் 15) முன்னிட்டுக் காண்போம்.

டேவிட் கருணாகரன்
தி கோவை மெயில்

### வீடு எனும் பள்ளி, தந்தை எனும் ஆசான்:

கோவையைச் சேர்ந்த டெக்ஸ்டைல் தொழிலில் பெயர்பெற்ற ஒருவரான N.தாமோதரன் அவர்களின் மூன்று மகன்களில் ஒருவர் விஜய் மோகன். பொறியியல் கற்றது கோவை பி.எஸ்.ஜி கல்லூரியில், மேற்படிப்புக்காக இண்டஸ்ட்ரியல் இன்ஜினியரிங் மற்றும் எம்.பி.ஏ பயின்றது அமெரிக்காவில் உள்ள ஸ்டீவன்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில். பொறியியல் துறை பற்றிய அறிவை கல்லூரிகள் வழங்க, வாழ்க்கைக்கு தேவையான வழிகாட்டுதலை இவர் கடந்து வந்த நல்ல மனிதர்கள் வழங்கினர்.

ஆடம்பரத்தின் அருகே மகன்கள் சென்றுவிடாமல், உழைப்பின் உன்னதத்தைப் பெற தாமோதரன் வழிசெய்தார். வீட்டில் கார் இருந்த போதிலும் சைக்கிளில் செல்வதில் அடங்கியுள்ள சுதந்திரத்தை தெரியப்படுத்தினார், புத்தக வாசிப்பின் சுவையை உணர்ந்து சர்வதேச தரம் கொண்ட புத்தகங்களை வாங்கி தந்தார். புழுதி பறக்க விளையாட அனுமதித்த அவர், அழுக்காகிய ஆடைகளையும் அவர்களே துவைக்கவேண்டும் என்று சொல்லி வளர்த்தார். மதிப்பெண்ணின் முக்கியத்துவத்தைவிட நன்மதிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறி வளர்த்தார். வீட்டில் உள்ள மூன்று கழிப்பறைகளை சுத்தம் செய்யும் பொறுப்பைக் கூட மூன்று மகன்களுக்கும் வழங்கினார்.

இதனால் சிறு வயது முதலே எந்த வேலையும் குறைந்ததல்ல என்ற சிந்தனை விஜய் மோகன் அவர்களின் மனதில் ஆழமாய் பதிந்தது.

ஏன் இதுபோன்ற வாழ்க்கைமுறை பழக்கங்களை பின்பற்றவேண்டும் என்பதைப் பற்றி தன் மகன்களிடம் தெளிவாக எடுத்துக்கூறும் குணம் கொண்ட அவர், தன் மகன்களுக்கு நல்லாசிரியராக இருந்து பல பாடங்களை கற்றுத் தந்துள்ளார்.

### படிப்பு பின் பயிற்சி:

தன் தந்தையும் பெரியப்பாவும் இணைந்து பிரீமியர் மில்ஸ் என்ற சிறப்பு பெற்ற மில்லை நடத்தி வந்தபோதிலும், விஜய் மோகன் அவர்கள் பொறியாளராக வர வேண்டும் என விரும்பி பி.இ படித்து முடித்தார்.

மேற்படிப்பிற்கு அமெரிக்கா செல்வதற்கு முன் இயந்திரவியல் துறை சார்ந்த தொழிலில் அனுபவத்தை பெற்றுக்கொள்ள எண்ணி, நேரடி தொழிற்பயிற்சி பெற புகழ் பெற்ற எல்.எம். டபிள்யூ நிறுவனத்தில் அனைத்துத் துறைகளிலும் பணிபுரிந்து அனுபவம் பெற விண்ணப்பித்திருந்தார்.

இந்த நிறுவனத்தில் இணைந்து பணியாற்றிட ஒரு தனிக் காரணம் விஜய் மோகன் அவர்களுக்கு இருந்தது. எல்.எம். டபிள்யூ நிறுவனத்தை நிறுவுவதற்கு முன்னதாகவே அந்நிறுவனத்தின் தலைவர் ஜி.கே.தேவராஜுலு லட்சுமி மில்ஸ் நிறுவனத்தை ஆரம்பித்திருந்தார். மற்றவர்கள் பஞ்சாலைகளுக்கு தேவையான இயந்திரங்களை இங்கிலாந்து மற்றும் ஐரோப்பாவில் இருந்து அதிகவிலை கொடுத்து இறக்குமதி செய்வார்கள்.

ஜி.கே.தேவராஜுலு அவர்களோ ஜப்பான் நாட்டிலிருந்து அதிக தரம், குறைந்த விலையிலான இயந்திரங்களை இறக்குமதி செய்வார். இப்படிப் பட்ட தொலைநோக்கு பார்வைகொண்டவரின் நிறுவனத்தில் வேலை செய்து அனுபவத்தைக் கற்க விரும்பினார் விஜய் மோகன். கேட்டபடியே அந்த வாய்ப்பை வழங்கினார் ஜி.கே.தேவராஜுலு.

தொழிற்சாலை இயங்கும் முறை, இயந்திரங்களின் செயல்பாடு, தொழிலாளர்களின் ஒருங்கிணைந்த உழைப்பு அனைத்தையும் பற்றி விஜய் மோகன் அங்கு பணியாற்றிய படியே அறிந்துகொண்டார். இந்த சிறந்த அனுபவத்தைப் பெற்ற பின் அமெரிக்கா சென்று தனது பொறியியல் மேற்படிப்பை தொடங்கினார்.

### தாயகத்தில் தொழில் தொடக்கம்:

விஜய் மோகன் மேற்படிப்பிற்கு அமெரிக்கா செல்லக் காரணமே பின்நாட்களில் கோவையில் சொந்தத் தொழில் தொடங்க வேண்டும் என்ற கனவிற்காக தான். இந்தியா திரும்பிய பின்னர், ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள் செய்யும் தொழிலில் உள்ள அருமையான வாய்ப்பை கோவை எல்.ஜி. நிறுவனத்தின் எல்.ஜி.வரதராஜுலு விஜய் மோகனிடம் தெரிவித்து, அவர் தொழிற்சாலையை தொடங்கும் வரை ஒரு வழிகாட்டியாய் பக்கபலமாக இருந்தார். 1974ல் கோவையில் மூன்றாயிரம் சதுரடியில் வெறும் முப்பது பணியாளர்களுடன் தொடங்கப்பட்டது பிரிக்கால் நிறுவனம்.

**இன்றைய நவீன உலகில் தனி நபராக வெற்றிபெறுவது மிக கடினம். எனவே ஒரு நல்ல குழுவின் அங்கமாக இருக்கவேண்டும், இல்லையென்றால் நல்ல குழுவை தங்களுக்கென உருவாக்கிட வேண்டும்.**



அவ்வாறு தன் கனவு மெய்ப்பட முதற்கட்டத்தில் தந்தை, பெரியப்பா வி.என்.ராமச்சந்திரன், எல்.ஜி.வரதராஜுலு, ஜி.கே.தேவராஜுலு ஆகியோர் எந்தளவு வழிகாட்டியாக இருந்தார்களோ அதே அளவிற்கு இன்னும் இரண்டு பேர் பிரிக்கால் நிறுவனத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்துள்ளனர்.

### தொடர்ந்து கற்கும் ஆவல் :

ஜி.கே.தேவராஜுலுவிடம் கிடைத்த அனுபவம், பின்நாட்களில் பிரிக்கால் தொடங்கி, அதற்கு தேவைப்பட்ட ஸ்விட்சர்லாந்து நாட்டு இயந்திரங்களை வாங்கும் போது விஜய் மோகன் அவர்களுக்கு பெரும் உதவியாக அமைந்தது. இயந்திரங்களை வாங்கும் முன், அந்த நாட்டில் தங்கி வேலை செய்து, அந்த இயந்திரங்களைப் பற்றி நன்கு அறிந்த பின்னர் தான் அவைகளை இறக்குமதி செய்தார்.

இவ்வாறு தொடக்கத்தில் இருந்தே தான் கற்ற பொறியியல் அறிவு, தொழில்த்துறை அனுபவம் அனைத்தும் பிரிக்காலின் முதல் அத்தியாயத்தில் மிகவும் கைகொடுத்தது. இத்துடன் நில்லாமல், விஜய் மோகன் அவர்கள் தொடர்ந்து கற்க விருப்பம் காட்டினார். அவர் எங்கு சென்றாலும் அங்குள்ள தொழிற்சாலைகளை பார்வையிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

லூதியானாவில் ஹீரோ மெஜஸ்டிக் நிறுவனத்திற்கான மொபெட் வாகனங்களுக்கு தேவையான உதிரிபாகங்களை பிரிக்கால் தயாரித்து வந்தது. 1979 ல் லூதியானாவிற்கு தொழில் ரீதியாய் சென்றபோது ஹீரோ சைக்கிள் தொழிற்சாலையை பார்வையிட அனுமதி பெற்றிருந்தார். அங்கு உள்ள பல இயந்திரங்கள் சந்தையில் உள்ளவைகளுக்கு சற்று வித்தியாசமானவையாக இருந்தது. ஹீரோ சைக்கிள் நிறுவனத்தின் தேவைக்கென அவர்களே அந்த இயந்திரங்களை பிரத்தியேகமாய் உருவாக்கியிருந்தனர். இவ்வாறு செய்ததால் இயந்திரத்தின் விலையை குறைக்க முடிந்தது, உற்பத்தியையும் அதிகப்படுத்த முடிந்தது.

இது ஒரு தாக்கத்தை அவர் மேல் ஏற்படுத்த, தன் நிறுவனத்திற்கு வந்துள்ள நபர் யாரென்று ஹீரோ நிறுவனத்தின் தலைவர் பிரிஜ்மோகன் லால் விசாரித்து, தொழிலில் இவ்வளவு ஆர்வமாய் உள்ளார் விஜய் மோகன் என்பதை அறிந்து கொண்ட பின், தொலைபேசி வழியாய் நேரடியாக அழைத்து தன் இல்லத்திற்கு விருந்துக்கு வருமாறு கூறினார். தேசிய அளவில் கொடி கட்டிப்பறக்கும் தொழிலதிபர் தன்னை அழைத்து, உபசரித்து, தன் அனுபவங்களை பகிர்ந்த அந்த தருணம் மிகவும் ஊக்கமாய் விஜய் மோகன் அவர்களுக்கு அமைந்தது. அந்த சந்திப்பிற்கு பின் பிரிக்கால் நிறுவனத்திற்கு தேவையான இயந்திரங்களை முடிந்தவரை தாமே உருவாக்கிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டார்.

இவர் போல், டி.வி.எஸ் குழுமத்தைச் சேர்ந்த சுரேஷ் கிருஷ்ணா அவர்களும் தனக்கு ஒரு நல்ல வழிகாட்டியாய் இருந்துள்ளார் என்று குறிப்பிடுகிறார் விஜய் மோகன். தொழிலாளர்கள் தான் தொழிற்சாலையின் அச்சாணி என்பதை உணர்ந்தவர் சுரேஷ் கிருஷ்ணா. அனைத்து பணியாளர்களுடன் நேரடியாக உரையாடுவார், தன் கருத்துகளை அவர்களிடம் பகிர்ந்து கொள்வார். இவ்வாறு பழகுவதால் ஊழியர்களின் தேவைகளை நேரடியாக அவரால் புரிந்து கொள்ளமுடிந்தது.

இதே போல் விஜய் மோகன் அவர்கள், தன் மேலாளர்களை தன் அறைக்கு அழைக்காமல், அவர்கள் உள்ள இடத்திற்கே நேரில் செல்வதை வழக்கமாக கடைபிடித்தார். இப்படி அவர்கள் உள்ள இடத்திற்கு செல்வதால் அவர்கள் தேவைகளை நேரில் தெரிந்து அதற்கு தீர்வளிக்க முடிந்ததாய் பதிவிடுகிறார்.

இப்படி பலரின் வழிகாட்டுதலும், அவர்கள் வழங்கிய பாடமும் பொறியாளராக இருந்த விஜய் மோகனை ஒரு சிறந்த தொழில் முனைவோராக உருவெடுக்க வலுசேர்த்தது. நம்பிக்கையான நிர்வாகிகள், சுறுசுறுப்பான தொழிலாளர்கள் இவரின் தலைமைக்கு பக்கபலமாக இருந்தனர். 1978ல் ஏற்றுமதியில் கவனத்தைச் செலுத்த முற்பட்டு, ஐரோப்பாவில் ஒரு மாதம் சுற்றுப்பயணத்தில் இருந்தார். அப்போது தொலைத்தொடர்பு வசதிகள் இல்லாத காலம். இருப்பினும் நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களும், தொழிலாளர்களும் சிறப்பாக செயல்பட்டு விஜய் மோகன் அவர்களுக்கு நம்பிக்கை தந்தனர்.

அதன் பின் இந்திய சந்தையில் பிரிக்கால் நிறுவனத்தின் பொருட்களுக்கு அமோக வரவேற்பு கிடைக்க, வெளி நாடுகளிலும் தனெக்கென தனி இடத்தை உருவாக்கியது பிரிக்கால். 1974 முதல் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உழைத்து, அதை பன்னாட்டு ஆட்டோமொபைல் நிறுவனங்கள் நாடும் நம்பிக்கை மிகுந்த நிறுவனமாக உயர்த்தி, 5000 க்கும் மேற்பட்ட ஊழியர்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தை கொண்டுவந்து, 2012ல் தன் 65வது வயதில் ஓய்வு பெற்றார் விஜய் மோகன்.

உற்பத்தி செய்யும் பொருட்களின் தரம், அதற்குரிய விலை, குறித்த நேரத்தில் டெலிவரி, சிக்கல் ஏற்படும் போது உடனடி சர்விஸ் இவை நான்கும் தொழில் செய்து முன்னேற அவசியமானவை. அதே போல் முதலீடு செய்தவர்கள், பணியாளர்கள், வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் ஆகிய நால்வர் இல்லாமல் ஒரு தொழில் சிறப்பாக நடைபெறவே முடியாது என்கிறார். இவர் சொல்வது பொறியியல் துறை தாண்டி அனைத்து துறைகளுக்குமே நிச்சயம் பொருந்தும் என்பதில் இருவேறு கருத்துகள் கிடையாது.

படம்: சதிஷ் பாபு

## சிறந்த பொறியாளருக்கான குணங்கள்...

பொதுவாக இன்ஜினீயர் என்றவுடன், மெக்கானிக்கல் இன்ஜினீயர், சிவில் இன்ஜினீயர், எலக்ட்ரிகல் இன்ஜினீயர் என்று வழக்கமாக பார்க்கப்படும் நபர்களைத் தான் நினைவு கூருவோம். ஆனால் என் பார்வையில் சத்தத்தை நெறிப்படுத்தி இசையாய் மாற்றி அதை தொகுத்து நமக்கு வழங்கும் ஒரு இசை அமைப்பாளரும் ஓசை இன்ஜினீயர் தான், நம் உடலுறுப்புகளின் பிரச்சினைகளை நிவர்த்தியாக்கும் அறுவை சிகிச்சை நிபுணரும் மனித இன்ஜினீயர் தான். இந்த துறை விசாலமானது.

இந்த இன்ஜினியரிங் துறையில் வெற்றி பெறவேண்டும் என்றால் அந்த துறையில் முயலும் நபர் ஆர்வம் கொண்டவராக இருக்க வேண்டும் **(Inquisitiveness).** தான் கற்றது கையளவு என்பதை உணர்ந்து புதியவற்றை கற்றுக்கொள்ளும் ஆவல், உத்வேகம் இருக்கவேண்டும் **(Continuous Learning).** அத்துடன் துறையில் பகுப்பாய்வு செய்து சிந்திக்கக்கூடிய நபராகவும் **(Analytical Thinking),** பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கக் கூடியவராகவும் இருக்கவேண்டும் **(Problem Solver).**

இன்றைய சவால் நிறைந்த சூழ்நிலையில் 'ஒரு பொறியாளர் தன்னுடைய முயற்சியினால் மட்டுமே வெற்றியாளராக முடியுமா?' என்றால், என்னைப் பொறுத்தவரை அதற்கு சாத்தியமில்லை என்றே சொல்லுவேன். இன்றைய நவீன உலகில் தனி நபராக வெற்றிபெறுவது மிகக் கடினம். எனவே ஒரு நல்ல குழுவின் அங்கமாக இருக்கவேண்டும், இல்லையென்றால் நல்ல குழுவை தங்களுக்கென உருவாக்கிட வேண்டும்.

இதுமட்டும் போதுமா என்றால், இதோடு மக்களுடன் நன்கு அணுகும் திறன் வேண்டும் **(Interpersonal Skills).** அப்போது தான் அவர்கள் உங்களை ஏற்றுக்கொள்வார்கள். நீங்கள் நிச்சயமாக பேச்சுத் திறனை வளர்த்துக் கொள்ளவேண்டும் **(Communication Skills).** நீங்கள் சொல்வதை அனைவரும் எளிதில் துல்லியமாக புரிந்துகொள்ளும்படி உங்கள் பேச்சு இருக்கவேண்டும்.

அதே போல், நீங்கள் ஒரு நல்ல தொழில்முனைவோராகத் திகழவேண்டும் என்றால், துணிச்சலோடு சவால்களை எதிர்கொள்ள பழகிக்கொள்ள வேண்டும் **(Risk Taking).** தோல்வியடைந்தால் அதிலிருந்து பாடத்தை கற்கவேண்டும், தோல்வி நிலையிலிருந்து மீண்டு வெற்றியை நோக்கி நகர முயல வேண்டும்.

# Rotary Aakruthi kicks off mass cancer awareness project

The Covai Mail

Rotary Club of Coimbatore Aakruthi, an exclusive women's Rotary Club kicked off its first free massive Cervical cancer and breast cancer screening camp for women recently. The women employees of Pricol Engineering Industries Ltd were the first to receive the benefits of this camp.

More than 70 women employees of Pricol Industries got examined and benefitted by this initiative.

Rtn. S Rajasekhar, DG, RI Dist 3201 and Lakshmi Mohan, Director, Pricol Engineering Industries Ltd inaugurated this camp in the presence of Rtn.Kavitha Gopalakrishnan, President, Rtn.Sapna Chajed, Secretary, RCC Aakruthi and Karthik Purushothaman, Business Head, Pricol Engineering Industries Ltd.

Recent statistics say that 50% of women who are diagnosed with Breast Cancer succumb to it and 60% of Indian women come to doctors at advanced stages. If a screening is done at the right time, women will certainly have knowledge of the cancers and they can surely defend themselves.



*Rtn. S Rajasekhar, DG, RI Dist 3201 , Rtn.Kavitha Gopalakrishnan , President, RCC Aakruthi, Lakshmi Mohan, Director, Pricol Engineering Industries Ltd and other guests during the campaign's launch.*

Towards that vision, Project HEAL was announced back in Feb 2021, and a State of the art Breast and Cervical Cancer screening van was deployed. RCC Aakruthi has planned to conduct 10 massive camps across Coimbatore to screen and help create awareness and also heal women.

Welcoming the delegates to the program, Rtn. Kavitha said "Cancers threaten the lives of many women in our country. As a Rotary Club that is for women's development, we have taken this initiative forward. If any woman we have screened in these camps are identified with either of these cancers, treatments at an affordable cost will be provided to them. We hope to touch 700 lives entirely through these 10 camps. At hospitals, they will be charged Rs.4000 for testing but here it is done free of cost"

As Cervical Cancer is caused by a virus, it can easily be tackled if women get vaccinated early. If women at 40s could get a pap smear test done, they can have knowledge of the risks (if present) and be safe from cancer. Rotary Aakruthi is planning to create awareness and also heal women across Coimbatore with this project.

Speaking at the event, Rtn. Rajasekhar said "if early detection of cancer prevails there won't be any serious damages to women's health. This project is aptly named Heal. Heal stands for High Awareness, Early Detection, Affordable Treatment and Low Mortality of Breast and Cervical Cancer."

"If these cancers are found in their first and second stages, they can be managed with much better outcomes. In our society, there is little knowledge about self-testing, women don't come forward to get tested.

I congratulate RCC Aakruthi for planning to organize 10 camps to help women find whether they are at risk of cancer."

Rtn. Rajasekhar also applauded the immense support rendered by Pricol and KMCH (the medical partner of Project HEAL).

Lakshmi Mohan expressed that she is truly grateful to both KMCH and RCC Aakruthi for bringing this initiative to their women employees, and also conveyed that Pricol will support the activities of Rotary that benefits the public, especially the downtrodden.

**If these cancers are found in their first and second stages, they can be managed with much better outcomes. In our society, there is little knowledge about self-testing, women don't come forward to get tested.**
*Rtn.Rajasekhar.*



## PTR ends villagers' struggle with darkness!



The Covai Mail

The families living in JJ Nagar, near Thiruparangundram in Madurai District are seeing hope and light for the first time in 20 years by the efforts taken by News 18 Tamil Nadu, and the swift measures implemented under the guidance of Minister Palanivel Thiaga Rajan.

According to a report, in the distant past, the families belonging to the Kaatunayakar Community residing in JJ Nagar were denied issuance of Property Tax receipts by the Corporation Officials, citing discrepancies with their Title Deeds (Patta) that were issued to them.

As a result of that, no EB connection was provided to those residents for decades despite the submission of multiple petitions to government officials in this regard. But no action was taken.

When this issue reached the office of PTR, immediate action was taken, and in the first phase, 6 houses have received power, and the following other houses are set to get power supply in the coming days.

# Lucknow welcomes Vanathi!



*President of BJP's Women's Wing (Mahila Morcha) and the MLA of Coimbatore South Constituency Vanathi Srinivasan was given an enthusiastic welcome by the members of Wing in Lucknow recenly. Vanathi was in Lucknow to inaugurate the BJP Mahila Morcha Uttar Pradesh State Executive Committee meeting. The inauguration was held in the presence of BJP UP State President Swatantra Dev Singh and a vast number of BJP Lucknow Women's Wing members.*

# BU's green initiative to promote cancer awareness

The Covai Mail

Bharathiar University's (BU) Women Studies, Computer Science and Human Genetics & Molecular Biology Departments organized a joint initiative to promote cancer awareness recently.

The three departments hosted a Soursop Plantation and Sapling Donation program under the Rashtriya Uchchatar Shiksha Abhiyan 2.0 – BCTRC program. The activity was done to create awareness about breast cancer and cervical cancer, and also to promote consumption of natural foods to prevent facing cancer risks.

Vice Chancellor of the university Prof.P.Kaliraj and Registrari/cProf.K.Murugavel inaugurated the project. 100 soursop plants were planted at the University campus and 400 saplings were donated to faculty and staff upon request.



*The Vice Chancellor Prof.P.Kaliraj planting a soursop sapling at the university during the event.*

# AGs Healthcare crosses 5000 sputnik vaccinations!

The Covai Mail

Coimbatore based Health services provider AGs healthcare conveyed on Monday that it has done more than 5000 Sputnik V vaccine administration in the region.

Dr.Adityan Guhan, Director, AGs Healthcare conveyed via an official press release that initially when they decided to go for an exclusive Sputnik-V vaccination drive, many had expressed that this exclusive drive wouldn't be a great success as it's new to the home ground and on top it's a paid vaccine.

"People of this kongu region gave an enormous response for the Sputnik V vaccination and now we are here injection the 5000th dose. Amongst the 5000 doses 30 percent of doses were given to pregnant and lactating mothers, handicapped, transgenders and frontline workers including police, doctors, para medicos, etc. We had great satisfaction in giving them the best efficacy vaccine as of now", says Dr Adityan Guhan.

The press release further mentioned that the vaccine drive for the first dose as well as second dose is on and people can walk in for both.

In case of any queries regarding Sputnik V, people can call 9943655556 and 9659455556.



## OPPO's new Enco Buds

The Covai Mail

OPPO, the leading global smart device brand, today, announced the launch of its entry-level OPPO Enco Buds. This budget offering packs AI-based call noise-cancellation technology with 24-hour battery life and is built for users who want to upgrade from their wired - and traditional Bluetooth earphones to their first truly wireless earbuds.

OPPO Enco Buds will be launched with exciting offers and discounts on the purchase, for its India-specific consumers.

The power-packed Buds will go on sale in India on September 14. The sale will be held exclusively on the e-commerce site - Flipkart and the launch offer price would be Rs.1,799 (original price Rs. 1,999). It will be a 3-day offer, starting from September 14 till September 16.

## CII to bring big electronics Players to city in next 3 years



*M. Ramesh, former Chairman, Arjun Prakash, Chairman, S. Prashanth, Vice Chairman and J. Balamurugan, former Chairman of CII Coimbatore during the press meet.*

The Covai Mail

CII Coimbatore's Electronics Task Force announced on Tuesday that it is taking measures to attract players in the Electronics Industry to enter Coimbatore.

A press meet was arranged on Tuesday at the CII Coimbatore Head office, where the members of the Task force Arjun Prakash, Bala Murugan, Ramesh and Prashanth conveyed that while Coimbatore as a city is thriving in education, manufacturing and healthcare, its output and the nation's output in electronics is low when put up against other fields.

The members shared that the Task Force has been discussing with big electronics companies operating in India and outside the country, asking about the pros and cons of their entry, and what are their expectations to enter the country, especially Coimbatore.

The members conveyed that Coimbatore's suitability for entering into the field of electronics is very good; one factor to say this with certainty is the tech savvy and well educated youth and well-designed college programs.

Bala Murugan, Past Chairman, CII Coimbatore conveyed that today Electronic chips are in everything, and every industry is gearing up to become 'Smart' but the electronic hardwares needed to deliver smarter products and gadgets that all fields require is largely being imported.

A vast majority of electronic hardware components like semiconductors and chips are being imported (at least 90%). Countries like China, Taiwan, Japan and South Korea started their journey in electronics and India is not in that league but if it could capitalize the opportunity now, if Coimbatore could attract Electronic Industry players here, it would lead to sustainability, job creation, fast delivery of products and better progress.

CII is aiming to bring at least 1 or 2 such players to Coimbatore in the next 2-3 years' time, make them set up a plant here, and then move onto research in the area.

## Flipkart strengthens Kirana Delivery Program

The Covai Mail

In view of the upcoming festive season and the Big Billion Days, Flipkart has strengthened its Kirana delivery program with more than 100,000 Kirana partners from across the country.

Together these partners shalll deliver millions of shipments during the festive season. Last year, more than 10 million deliveries were made by these specially trained Kirana partners across the country during the festive season.

Flipkart started the program to help local stores and shops (Kirana) get on board as delivery partners in 2019, and since then, has invested consistently to get these businesses ready for making deliveries. Flipkart has a dedicated team as part of this ongoing partnership that helps the Kiranas with knowledge, expertise, experience and technology to make millions of deliveries seamlessly.

With a 100,000 strong Kirana delivery network which doubled from last year, Flipkart is further strengthening its last-mile network and reach, especially in pin-codes and towns that are difficult to reach and creating opportunities for digital upskilling as well as additional income for kiranas.

# CPC elects New Office Bearers

The Covai Mail

Coimbatore Productivity Council (CPC) held its 63rd Annual General Meeting recently in virtual mode, and in that meeting, the newly elected team of Office Bearers, Governing Body Members & Special Invitees for the year 2021 – 2022 were introduced.

K.Muthukumar was elected as the President, K.Arul and S.Sudhakar were elected Vice Presidents, K.Chitra, R.Ravikumar and G.Manoharan were elected the Hony. Secretary, Hony.Treasurer and Hony. Jt.Secretary respectively, and A.M.Natarjan serves as the Immediate Past President of the Council.

The elected Governing Body Members include C.G.Sripriya, A.SankaraSubramanian, N.Vivek, K.Palanisamy, M.R.Manoharan, S.Velumani, P.S.Devaraj, Mithun Mahendra Ramdas, K.Athiyaman & M.Bhuvaneswaran.



***K.Muthukumar,***
*President, CPC.*

# Ladies Circle honors a unique eco-store

The Covai Mail

Several parts of India are focused on reducing plastic-wastes, especially single use plastics. Recently, Coimbatore Metropolitan Ladies Circle 23 (CMLC 23) took up the initiative 'No Plastic Bag Day' campaign in order to encourage the use of sustainable materials for packaging.

When it found that a unique convenience store called 'Earth Story' is taking efforts to promote a green culture, the association honored it by handing over free, reusable cloth bags to applaud their efforts. CMLC 23 sponsored cloth bags with 'Ladies Circle India' logo. Earth Story- Coimbatore, located at Perks Arch Road promotes products that are eco-friendly, free from animal cruelty and has minimal carbon footprint. In the food section it sells products that are plant based alternatives to milk, meat, curd, ice cream, sauces etc.

A press release from CMLC 23 mentioned "'Veganism', a way of living that attempts to exclude all forms of animal exploitation and cruelty, is gaining credence among many Coimbatoreans. Businesses that cater to this segment are seen as beacons in providing sustainable alternatives."

With such regards, the association aspires to honor such companies that promote the greener way of life through their products.




*From Right: Meenakshi, Chairperson and Shweta, Publicity Convenor, Coimbatore Metropolitan Ladies Circle 23 handing over a cloth bag to Indu, Franchisee, Earth Story, Coimbatore.*

To ADVERTISE IN THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL
**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

RNI Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from #2-F, Trishank Apartment, G.K.D Nagar, Nethaji Road, Papanaikenpalayam, Coimbatore - 641 037 and Printed at Newsmen Associates Limited, #1, Sidco Industrial Estate, Kurichi, Coimbatore - 641 021. Editor: C.Srinivasan

# Covai will become World's Pumpcity soon - SIEMA




*KV Karthik, President, SIEMA addressing the gathering. From Left: Ma.Sendhil, Vignesh, Mithun Ramdass, Vice Presidents and Krishna, Former President & Election Officer, SIEMA.*

The Covai Mail

Southern India Engineering Manufacturers' Association (SIEMA) held its 68th Annual General Meeting on Wednesday.

The current President of the Association KV Karthik expressed that while Coimbatore contributes 55% of total pump production of India, in the recent years it has faced serious disturbance due to pandemic and hike in raw materials cost.

Raw materials cost hike has led to an increase in cost of manufacturing by a minimum of 30%. The President appealed the Central Government and the PM to interfere in this matter and bring down the Raw Materials cost. Earlier he thanked the Prime Minister of India for the 'One-District, One-Product' scheme under the target of $400 Billion in exports.

He also expressed his gratitude to CM of Tamil Nadu MK Stalin for including Pumps as the product of Coimbatore. He said this announcement will facilitate central funding in establishing several common facility center for pumps in our district.

The global market for pumps is estimated to be of $800 billion with India contributing less than 2% of it. Weighing the increasing competitiveness of Indian pumpsets, and the support from the Govt., Karthik expressed that Covai will become the pump city of the world in a few decades.

Heads of Associations like Indian Chamber of Commerce and Industry, Coimbatore; CODISSIA and CO INDIA were present along with SIEMA's members.

Karthik also highlighted the role of All India Council of Association of MSME (AICA) and how it is voicing the concerns of MSME in unison to the Govt.

He happily stated that SIEMA and its members had done Relief activities worth Rs. 10 crore, organized Vaccination drive for its stakeholders as well.

Later it was conveyed at the event that K.V. Karthik, who is the Managing Director of Deccan Industries was re-elected the association's President and Vignesh of Ellen Pumps, Mithun Ramdass of Mahendra Pumps and Ma. Sendilkumar of Supertec Industries were re-elected as Vice Presidents.

# PSG reiterates motorists to follow Road Safety norms

The Covai Mail

Since the beginning of this millennium, the International Federation of Red Cross observes the second Saturday of September as World First Aid Day. This year, it is celebrated on 11th September, 2021.

The modern medical graduate is expected to be familiar with First Aid techniques from the very moment they step into the portals of a medical college.




Dr. P.A. Kumar, faculty in-charge of PSGIMSR Simulation and Skills Training Laboratoryinforms that all the students of MBBS program compulsorily undergo a training module called Basic Life Support as part of their induction activity.

This skill is reinforced again during their internship. In fact, as the Simulation Centre of PSG is affiliated to the American Heart Association, as part of its mandate, Basic Life Support training is provided to all the undergraduate and postgraduate students of medicine. He also said that re-training is being provided whenever any student or intern requested for it.

The fundamental concept of providing care in the Emergency Department is to triage the patients on arrival, said Dr Mani Sundar, Medical Officer in-charge of the Emergency Medicine Department.Basic First Aid provided includes wound care, pain management, counselling etc., he said. The Emergency Medicine Department provides care to all its patients within 10 minutes of their arrival, he added.

The Principal of PSGIMS&R and PSG Hospitals, Dr.T.M.SubbaRao said that the Institute is planning to offer training on First Aid and Basic Life Support to the general public at subsidised costs as part of Corporate Social Responsibility.

This is because, every time, it is not necessary that some medical staff is to be involved in providing first aid. In an emergency, even ordinary people should be able to help and save someone's life by providing first aid. He reiterated that a First Aid Kit must be available in every house, just as it is available in automobiles. Every year, the contents of the First Aid Kit must be reviewed to look at the expiry date and update the kit accordingly.

Dr. Anuratha MD, Nursing Superintendent, said that all the Nurses are trained in Basic Life Support as part of their induction training. In addition, nurses posted in Critical Care, Paediatric Intensive Care and Neonatal Intensive Care are additionally trained in Advanced Cardiovascular Life Support, Paediatric Advanced Life Support and NeonatalAdvanced Life Support, respectively.

## Sugar Free & Katrina jointly promote fitness!

The Covai Mail

Leading low calorie sweetener brand 'Sugar Free', marks the launch of its campaign 'Fitness ka Pehla Kadam' featuring leading actress-Katrina Kaif.

With the intent to inspire its audience to consider healthier alternatives to sugar as a lifestyle change, the TVC drives larger focus and awareness on the brand's Stevia range named Sugar Free Green. Conceptualised by Wunderman Thompson, the campaign features Katrina Kaif who in a playful interaction nudges the consumers to start their fitness journey by switching to Sugarfree from sugar '.

# SKCET receives AICTE- Clean & Smart Campus Award

The Covai Mail



*Principal of SKCET Janet receiving the award from Minister of Education Dharmendra Pradhan in the presence of Rajkumar Ranjan Singh, Minister of State for Education and various other AICTE members.*

Sri Krishna College of Engineering and Technology (SKCET), Kuniamuthur, Coimbatore got Third Rank in National Level in the AICTE-Clean and Smart Campus Award 2020 under the 'Other Colleges Category' in an award distribution function held on Sunday at New Delhi.

AICTE has been appreciating the colleges for maintaining the clean and smart campus across India. This year SKCET secured the third rank at national level for maintaining the campus clean and smart, also received this award for second time.

Minister of Education Dharmendra Pradhan presented the award to J.Janet, Principal, SKCET in the presence of Rajkumar Ranjan Singh, Minister of State for Education and various other AICTE members.

The Institution has achieved this National ranking for its top scores in the ranking parameters of Clean and Smart Campus using best and smart technology to keep campus pollution-free, controlling water wastage, and using natural resources. SKCET was recognised for encouraging Indian Knowledge System in the campus and inculcating Indian tradition in young aspiring minds. Meanwhile S.Malarvizhi, Chairperson and Managing Trustee, Sri Krishna Institutions and CEO K.Sundararaman appreciated the Principal, faculty and students for maintaining a clean and smart campus.

# Paralympians changed perception towards disability - *Vice President*

The Covai Mail

The Vice President of India, M. Venkaiah Naidu on Thursday lauded the performance of our sportspersons at Tokyo Olympics and called for doubling the medal count in the Paris Olympics in 2024. He also urged all stakeholders including the private sector to build an all-encompassing support system for our young and aspiring athletes.

Inaugurating the Tiruchirappalli Campus of SRM Institute of Science and Technology virtually from Chennai Raj Bhavan, the Vice President said that the stellar performance of India's sportspersons at Tokyo Olympics and Paralympics filled the hearts of all our countrymen with pride.

Praising the grit and resilience of our Paralympians for bringing home a record number of 19 medals, he said that their exemplary performance has not only changed people's perception towards disability but has also kindled hopes of India emerging as a major sporting power. "There are many more Avani Lekharas and Neeraj Chopras waiting in the wings whose talent can be nurtured successfully if an enabling ecosystem is created", he added and appealed to educational institutions to take a lead in this regard. He also suggested that universities should revive and promote traditional Indian sports like kabaddi and kho-kho in a big way.

Underlining the importance of quality education in creating a new resurgent and aspirational India, the Vice President called for increasing employability of the students passing out of our universities and colleges. In this regard, he emphasised the need for building a stronger academia-industry connection and focusing on the skills required for the Industry. Emphasising the need for emotional and social skills in a rapidly changing world, Shri Naidu asked the students to develop a positive outlook towards life and seek to contribute to the larger cause of nation-building. "Strive constantly to use your education for the good of others, society and the nation at large," he added.

Recalling India's rich and illustrious history in education with institutions such as Takshashila and Nalanda, he called for regaining this past glory and make India Vishwaguru again.

"The role of the private sector in supplementing the efforts of the Government becomes critical when it comes to realising the dream of an educationally empowered India", he added.

Stressing the need to direct technological advancements towards mitigating the adverse impact on environment and climate change, the Vice President opined that science and technology should provide solutions to the everyday problems of the common man and improve the overall quality of life.



**Their exemplary performance has not only changed people's perception towards disability but has also kindled hopes of India emerging as a major sporting power**

*– Venkaiah Naidu.*

## British Council brings various programs to Covai

The Covai Mail

The British Council is the UK's international organization for cultural relations and educational opportunities. The Council recently launched several digital courses and workshops for young learners and adults alike.


Its online English courses for young learners aim to build confidence by enhancing world knowledge, developing 21st century life skills and improving fluency in English.

Closely replicating the classroom experience, the sessions are interactive, lively, and challenging. The learning plan is designed to also help develop essential life skills such as leadership, teamwork, creativity, critical thinking and problem-solving.

Similarly, the Reading for Life program takes youngsters on a journey from 'Learning to Read' to 'Reading to Learn' by challenging them to read at least one book every week from British Council's curated online collection of e-books, audiobooks and comics.

Adults and working professionals looking to boost their creativity and communications skills can also benefit. British Council's Creative Writing course offers the opportunity to learn a variety of techniques to improve one's writing process and build a creative bent of mind.

Fully guided and supported by experienced teachers, the course content covers fiction, short stories, poetry, feature writing and more.



# ஜவுளித்தொழிலுக்கு ஊக்கம்!



**தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகமான மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கி வரும் தொழிலாக ஜவுளித்துறை இருந்து வருகிறது. கிட்டத்தட்ட லட்சக்கணக்கான தொழிலாளர்கள் இது சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.**

**சாணக்கியன்**
**தி கோவை மெயில்**

தற்போது நடந்து வரும் சட்டசபைக் கூட்டத் தொடரில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பருத்தி மீது விதிக்கப்பட்டு வந்த ஒரு சதவீதம் சந்தை வரியை நீக்குவதாக ஒரு மிக முக்கியமான கொள்கை முடிவை அறிவித்திருக்கிறார். தமிழக ஜவுளித்துறை மேம்பாட்டுக்கு உதவும் வகையில் அமையும் என்று இத்துறை சார்ந்த பலரும் வரவேற்று இருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக இது அந்த துறை சார்ந்தவர்களின் 35 ஆண்டுகால கோரிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் நடைபெறும் துணி வணிகத்தில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு தமிழ்நாடு சார்ந்து நடைபெறுகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் இயங்கிவரும் நூற்பாலைகளின் எண்ணிக்கை சுமார் 1570. இந்த நூற்பாலைகளில் மொத்தம் நூற்கப்படும் நூலின் அளவானது இந்தியாவின் நூற்புத்திறனில் 45% என்பது இங்கு கவனிக்கத்தக்கது. இந்த நிலையில் இங்கு நடைபெறும் ஜவுளித்துறை தொழிலுக்குத் தேவையான பஞ்சின் அளவில் கிட்டத்தட்ட 90%க்கும் மேல் வேறு மாநிலங்களில் இருந்து தான் கொண்டு வரப்படுகிறது.

இவ்வாறு கொண்டு வரப்படும் பஞ்சு மற்றும் கழிவுப் பஞ்சின் விற்பனை மதிப்பு மீது தமிழ்நாடு வேளாண் பொருள்கள் விற்பனை ஒழுங்கு முறைச்சட்டம் 1987 பிரிவு 24ன் படி, 1% சந்தை நுழைவு வரி விதிக்கப்படுகிறது. இந்த சட்டத்தின்படி பருத்தி, பஞ்சு மற்றும கழிவுப் பஞ்சு ஆகியவை வேளாண் பொருட்களாகக் கருதப்பட்டு சந்தைகளில் கொள்முதல் அல்லது விற்பனை செய்யப்படும் போது இந்த வரி விதிக்கப்படுகிறது.

பருத்திப் பொதிகளின் மீது இந்த வரி விதிப்பதில் தவறில்லை. ஆனால் பஞ்சு, மற்றும் கழிவுப் பஞ்சு வெளி மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யும்போது வரி விதிக்கப்படுவதால், சிறு, குறு நூற்பாலைகள் பெரிய நெருக்கடியைச் சந்திக்க வேண்டி உள்ளது. எனவே இந்த பஞ்சின் மீது விதிக்கப்படும் நுழைவு வரியை நீக்க வேண்டும் என்பது நெசவாளர்கள் மற்றும் இது சார்ந்த தொழில்முனைவோரின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்தது. ஒன்றல்ல, இரண்டல்ல கிட்டத்தட்ட 35 ஆண்டுகளாக இந்த கோரிக்கை அரசாங்கத்திடம் வைக்கப்பட்டு வந்தது இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டு அறிவிப்பு வந்திருக்கிறது.

இந்த கூட்டத் தொடரிலேயே உரிய சட்டத்திருத்தம் கொண்டு வரப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்திருக்கிறார்.

இது உண்மையிலேயே பாராட்டி வரவேற்க வேண்டிய அறிவிப்பு. ஏனென்றால் இந்தியாவில் உள்ள சிறு, குறு நூற்பாலைகளில் 80% தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. இவை அனைத்துமே பிற மாநிலங்களில் இருந்து வரும் பஞ்சு, மற்றும் கழிவுப் பஞ்சை நம்பித் தான் இயங்கி வருகின்றன. இன்று தொழில் உலகமானது நடப்பு மூலதனம், போக்குவரத்து கட்டணங்கள் என்று விழிபிதுங்கிக் கொண்டு இருக்கும் நிலையில் இந்த ஒரு சதவீத வரி ரத்து என்பது ஓரளவு மூச்சுவிட வைக்கும் என்பது தான் நடைமுறை உண்மை.

ஒரு காலத்தில் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று கோயம்புத்தூர் பகுதியைக் கொண்டாடும் அளவு இருந்த நிலை வளர்ந்து இன்று தமிழகத்தின் பிற பகுதிகளிலும் ஜவுளித்துறை கால்பதித்து சிறப்பாக செயல்பட்டு வரும் நிலையில் அதற்கு தேவையான வசதிகளைச் செய்து வருவதே பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த உதவும். அதிலும் கோயம்புத்தூர், சோமனூர், திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல், கரூர், மதுரை, விருதுநகர் என்று பல பகுதிகளிலும் கைத்தறி, விசைத்தறி மற்றும் ஓபன் எண்ட் நூற்பு இயந்திரங்கள் பெருமளவு இயங்கி வருகின்றன. இவற்றுக்கு இந்த வரி நீக்கம் நல்லதொரு ஊக்கமாக அமையும்.



எல்லாவற்றுக்கும் மேலாக தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகமான மக்களுக்கு வேலை வாய்ப்பை காலம், காலமாக வழங்கி வரும் தொழிலாக ஜவுளித்துறை இருந்து வருகிறது. கிட்டத்தட்ட லட்சக்கணக்கான தொழிலாளர்கள் இது சார்ந்த தொழில்களில் தமிழகம் முழுவதும் ஈடுபட்டு வருகிறார்கள். நூறாண்டுகளுக்கும் மேலாக படிப்படியாக வளர்ச்சி பெற்று தொடர்ந்து இயங்கி வரும் இந்த தொழிலுக்கு ஊக்கம் அளிப்பது மிகவும் அவசியம்.

அந்த வகையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கும் அறிவிப்பு பல வகையிலும் பயன் தரக்கூடியது. அரசாங்கம் என்பது நாட்டின் நலனையும் அதில் வாழும் மக்கள் நலனையும் அனுசரித்து அதற்கான கொள்கை முடிவுகளை எடுத்து செயல்படுவதே நீண்ட கால நோக்கில் நன்மை தரும். அந்த வகையில் பதவி ஏற்ற குறுகிய காலத்தில் மக்களின் குறிப்பறிந்து தொழில்துறையின் நாடியை பிடித்துப் பார்ப்பது போல இந்த அறிவிப்பை வெளியிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. நெசவாளர்கள், சிறு, குறு நூற்பாலைகள் உள்ளிட்ட ஜவுளித்துறை சார்ந்த அனைவரும் இதனை வரவேற்கிறார்கள். நாட்டுக்கு நலமும், வளமும் சேர்க்கும் என்ற வகையில் நாமும் வரவேற்போம்!

---

### பருத்தி மீதான 1 % வரி நீக்கம்

## சைமா சார்பில் முதல்வருக்கு நன்றி

**தி கோவை மெயில்**

பருத்தி விவசாய சந்தை வரியை நீக்க கோரி தமிழக விவசாயிகளும், ஜவுளித் துறையினரும் மாநில அரசை கோரி வந்த நிலையில் பருத்தி மற்றும் பருத்தி கழிவு மீதான ஒரு சதவீத விவசாய சந்தை வரி ரத்து செய்யப்படுகிறது என தமிழக முதல்வர் அண்மையில்அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.



**வலமிருந்து தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கத்தின் துணைத்தலைவர் ரவிசாம், இந்திய ஜவுளி கூட்டமைப்பின் தலைவர் ராஜ்குமார் மற்றும் சைமா செயலர் செல்வராஜூ.**

இதுகுறித்து, தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கத்தில் நடைபெற்ற பத்திரிக்கையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய இந்திய ஜவுளி கூட்டமைப்பின் தலைவர் ராஜ்குமார் மற்றும் தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கத்தின் துணைத்தலைவர் ரவிசாம் ஆகியோர் தமிழக முதல்வருக்கு ஒட்டு மொத்த இந்திய ஜவுளித் தொழிலின் சார்பாகவும், தமிழக ஜவுளித் தொழிலின் சார்பாகவும் நன்றி தெரிவித்தனர்.

மேலும், இந்த வரி நீக்கத்தினால், தனியார் மற்றும் இந்திய பருத்திக் கழகம் தமிழகத்தில் கிடங்கில் பஞ்சை இருப்பு வைத்து அன்றாடம் சிறு மற்றும் குறு நூற்பாலைகளுக்கு விற்க முன்வருவர் என்றும், இதனால் இந்த நூற்பாலைகளின் நடப்பு மூலதனம் தேவை மற்றும் மூலப்பொருள் வாங்கும் நேரம் போன்றவை கணிசமாக குறைந்து போட்டியிடும் திறன் அதிகரிக்கும் என்று கூறினர்.

ஒரு சதவீத பருத்தி கழிவு பஞ்சு வரி நீக்கம் ரோட்டார் நூற்பாலைகள், தங்களுக்குத் தேவையான கழிவு பஞ்சு முழுவதையும் தமிழகத்திலேயே வாங்க முடிவதால் மாநிலத்தின் ஜி.எஸ்.டி வரி வருவாய் கணிசமாக உயரும். நாட்டிலேயே அதிகமான மதிப்பு கூடிய ஜவுளிப் பொருட்களை தமிழக கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்கள், கழிவு பஞ்சிலிருந்து தயாரிக்கப்பட்ட நூலில் இருந்து உற்பத்தி செய்வதால் பன்னாட்டு ஜவுளி விற்பனையாளர்கள் தமிழகத்திற்கு அதிக வியாபாரத்தைக் கொடுப்பார்கள். இதனால் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி விற்பனைகள் கணிசமாக உயரும் எனத் தெரிவித்தனர்.

---

## சிறந்த பிரதிநிதி விருதை வென்ற நேஷனல் மாடல் பள்ளி மாணவி

**தி கோவை மெயில்**

மாடல் யுஎன் நிறுவனம் நடத்திய மாடல் யுனைடெட் நேஷன்ஸ் மாநாட்டில் “சிறந்த பிரதிநிதி விருதை” நேஷனல் மாடல் பள்ளி மாணவி கனிஷ்கா ஸ்ரீ வென்றுள்ளார்.

ஆன்லைன் மூலம் நடத்தப்பட்ட இந்த மாநாட்டில் நேஷனல் மாடல் பள்ளி மாணவர்கள் 22 பேர் உட்பட நாடு முழுவதிலும் இருந்து 7 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 130 மாணவர்களும் பாகிஸ்தானைச் சேர்ந்த 2 மாணவர்களும் பங்கேற்றனர்.

மாநாடு அனுபவம் குறித்து மாணவி கனிஷ்கா ஸ்ரீ கூறுகையில்: சர்வதேச போட்டியில் இது எனது முதல் நுழைவு ஆகும். “சிறந்த பிரதிநிதி விருதை” வென்றதில் மகிழ்ச்சியடைகிறேன். நான் எம்யூஎன் மாநாட்டின் உலக சுகாதார அமைப்பு குழுவில் சீனாவைப் பிரதிநிதித்துவப் படுத்தினேன். இந்த போட்டிக்காக நான் நிறைய ஆராய்ச்சி செய்தேன். இந்த மாநாட்டில் எனது பள்ளியை நான் பிரதிநிதித்துவப் படுத்தியதில் மகிழ்ச்சியடைகிறேன் என்றார்.

இது குறித்து நேஷனல் மாடல் பள்ளியின் முதல்வர் கீதா லட்சுமண் கூறுகையில்: இடைநிலைப் பள்ளிகளுக்கான மாடல் யுனைடெட் நேஷன்ஸ் மாநாட்டில் எங்கள் மாணவர்களை பங்கேற்கச் செய்ய விரும்பினோம். இந்த மாநாட்டில் எங்கள் மாணவர்கள் பங்கேற்பது இதுவே முதல் முறை ஆகும்.

130 பங்கேற்பாளர்கள் இடையே எங்கள் குழு இரண்டாம் இடத்தைப் பிடித்ததில் மகிழ்ச்சியடைகிறோம். இந்த மாடல் யுனைடெட் நேஷன்ஸ் மாநாடுகள் மாணவர்களின் நம்பிக்கை மற்றும் ராஜதந்திரம் மற்றும் ஒருவருக்கொருவர் திறன்களை அதிகரித்தல், ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு திறன்களை வளர்க்க ஒரு சிறந்த தளத்தை வழங்குகிறது என்று தெரிவித்தார்.




**சிறந்த பிரதிநிதி விருதை வென்ற நேஷனல் மாடல் பள்ளி மாணவி கனிஷ்கா ஸ்ரீ**

---

## முதலாமாண்டு மாணவர்கள் தொடக்க விழா




**ஸ்ரீ ராமகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியின் முதலாமாண்டு மாணவர்களுக்கான தொடக்க விழா நடை பெற்றது. எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் லக்ஷ்மி நாராயணசுவாமி நிகழ்ச்சியினை குத்துவிளக்கு ஏற்றி தொடக்கி வைக்கிறார்.**

---

### பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்படும்

**தி கோவை மெயில்**

தமிழக சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் செய்தித்துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் தமிழகத்தில் பத்திரிக்கையாளர் நலவாரியம் அமைக்கப்படும் என செய்தித் துறை அமைச்சர் சாமிநாதன் அறிவித்துள்ளார்.

மேலும், பணிக் காலத்தில் இறக்கும் பத்திரிகையாளர் களுக்கான குடும்ப நிதி உதவி ரூ.3 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தப்படும். இளம் பத்திரிகையாளர்கள் உயர்கல்வி படிக்க அரசு நிதியுதவி வழங்கப்படும்.

சமூகம் மற்றும் விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்காக பங்காற்றி வரும் சிறந்த இதழியலாளருக்கு ரூ.5 லட்சம் பரிசுதொகை கொண்ட ‘கலைஞர் எழுதுகோல் விருது’ வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## மத்திய நிதியமைச்சரிடம் வேண்டுகோள்

**தி கோவை மெயில்**

கோவை சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் சார்ந்த அமைப்புகளுக்கான ஒருங்கிணைப்பு குழுவின் சார்பில் கடன் பெறுவதற்கான தகுதி குறித்த மறுபரிசீலனை மற்றும் கடன்தொகை மறுசீரமைப்பு கால நீட்டிப்பு வேண்டி மத்திய நிதியமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தொழில் அமைப்புகளின் கூட்டுக்குழு சார்பாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், மத்திய சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் நாராயண் டாட்டு ரானே மற்றும் மத்திய சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறையின் கூடுதல் செயலாளர் மற்றும் மேம்பாட்டு ஆணையர் தேவேந்திரகுமார் சிங் ஆகியோரிடம் வேண்டுகோள்கள் அளிக்கப்பட்டன.

இதுகுறித்த பத்திரிகை செய்தியில், கடன்தொகை மறுசீரமைப்பின் போது தற்போது உள்ள வரையறையான 50 கோடி ரூபாய் என்பது உயர்த்தப்பட்டு 100 கோடி ரூபாய் வரை வழங்கப்பட வேண்டும். கடன்தொகை கட்டுவதற்கான கால நீட்டிப்பு வசதி அடுத்த ஆண்டு செப்டம்பர் 30 வரை நீட்டிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## கைத்தறி நெசவாளர்களுக்கு 10% ஊதிய உயர்வு!

**தி கோவை மெயில்**

தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதம் அண்மையில் நடைபெற்றது. அதில் கைத்தறி நெசவாளர்களுக்கான அடிப்படை ஊதியம் 10% உயர்த்தப்படும் என கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த கொள்கை விளக்கக் குறிப்பை வெளியிட்ட அமைச்சர் காந்தி, கைத்தறி நெசவாளர்களுக்கு அடிப்படைக் கூலியில் 10 % மற்றும் அகவிலைப்படி 10% உயர்த்தி வழங்கப்படும்.

கதர், பாலி வஸ்திர ரகங்களை மக்கள் அறிந்து கொள்ள ரூபாய் 20 லட்சம் செலவில் விளம்பரப்படுத்தப்படும். கைத்தறி வேட்டி, சேலை ரகங்களுக்கு நெசவுக்கு முந்தைய பணிக்கான கூலி உயர்த்தப்படும் என்று அறிவித்தார்.

மேலும், திண்டுக்கல் சின்னாளப்பட்டியில் ரூ. 6 கோடியில் சாயக் கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம் மற்றும் ரூ. 5 கோடி மதிப்பில் கைத்தறி ரகங்களின் பாரம்பரியம் குறித்த கைத்தறி அருங்காட்சியம் அமைக்கப்படும்.

---

### கோவையில் 45% மக்களுக்கு

## எதிர்ப்பு சக்தி குறைவு - ஆட்சியர் தகவல்

**தி கோவை மெயில்**

கேரளாவில் நிபா வைரஸ் பரவலைத் தொடர்ந்து தமிழக கேரளா எல்லைகளில் கண்காணிப்பைத் தீவிரபடுத்த அந்தந்த மாவட்ட நிர்வாகத்திற்க்கு தமிழக சுகாதாரத்துறை செயலாளர் இராதாகிருஷ்ணன் உத்தரவிட்டுள்ளார். இதையடுத்து கோவை கேரள எல்லையில் உள்ள வாளையாறு, வேலந்தாவளம், மீனாட்சிபுரம், உள்ளிட்ட 13 சோதனைச் சாவடிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு கூடுதல் பணியாளர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றஷ்னர்.

இந்நிலையில் கண்காணிப்பு பணிகளை கேரளா எல்லையான வாளையாறு சோதனை சாவடியில் மாவட்ட ஆட்சியர் சமீரன் சமீபத்தில் ஆய்வு மேற்கொண்டார்.



பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில்: நிபா வைரஸ், ஜிகா வைரஸ் மற்றும் கொரோனா பாதிப்பு கேரளாவில் கண்டறியப்படுவதால் மாவட்ட எல்லையில் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப் பட்டுள்ளது. கேரளாவில் இருந்து கோவை வருவோரிடம் கொரோனா நெகடிவ் சான்றிதழ் மற்றும் இரண்டு முறை தடுப்பூசி செலுத்திய சான்றிதழ்கள் சரிபார்க்கப்படுவதோடு மாவட்டத்திற்கு வருவோரின் வாகன எண்கள் பதிவு செய்யப்படுகிறது. மேலும் வாகன சோதனைகளை கடுமையாக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தில் 83 கிலோ லிட்டர் திரவ ஆக்சிஜன் தயார் நிலையில் உள்ளது. பரவலைத் தடுக்க கூடுதல் கட்டுப்பாடுகளும் போடப்பட்டுள்ளது. மூன்றாவது அலைக்கு செல்லாமல் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

ஜூலை மாதம் மேற்கொள்ளபட்ட ஜீரோ பிரிவிலென்ஸ் ஸ்டடி கோவை மாவட்டத்தில் உள்ள பொதுமக்களில் 43% மக்களுக்கு மட்டுமே எதிர்ப்பு சக்தி உள்ளதாக கண்டறியபட்டது அதிகப்படியான தடுப்பூசி செலுத்தபட்டதின் காரணமாக எதிர்ப்பு சக்தி 55 சதவீதமாக அதிகரித்து உள்ளது. 45% மக்களுக்கு எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ள காரணத்தால் அவர்கள் கவனத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தபட்டுள்ளது என்றார்.

# மாமிசம் சாப்பிடுவது குற்றமா?

தி கோவை மெயில்

அசைவம் தவறா? சைவம் சரியா? இப்படியே ஆளாளுக்கு வாதிட்டு எதைச் சாப்பிடுவது என்று மாறுபட்ட கருத்துக்களோடு இருக்கையில், இதில் சத்குருவின் கருத்தென்ன? வழக்கம் போல் மாறுபட்ட சிந்தனைத் துளிகளை வழங்கியுள்ளார். அறிந்து கொள்ள மேலே படியுங்கள்..

உணவு மேசையில் அமர்ந்திருக்கிறீர்கள்! பல விதமான பதார்த்தங்கள் நிரம்பி இருக்கின்றன. நீங்கள் உணவருந்தத் தயார். இப்போது உங்களின் மனநிலை எப்படி இருக்கிறது?

ஆனந்தமாக இருந்தால், மனசுக்குள் திரைப்பட பாடலொன்று ஓடும். நட்போ, உறவோ அருகில் இருந்தால், அரட்டைக் கச்சேரி ஆரம்பிக்கும். அடுத்தடுத்த வேலைகள் காத்திருந்தால் எதிலும் மனசு லயிக்காது. ஏதேனும் பிரச்சினை இருந்தாலோ, அப்போது உங்களை எரிச்சலும், கோபமும் எடுத்துச் சுவைத்துக் கொண்டு இருக்கும் சரிதானே!

நீங்கள் படிக்கப் போவது இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த மனிதரின் கதை...

மஹாவீரர், ஒரு சத்ரியர். மாமிசம் சாப்பிட்டு வந்தார். ஒருநாள் சாப்பிடும்போது, 'இதுவும் உயிர்தானே, நாம் ஏன் இதைக் கொன்று சாப்பிட வேண்டும்? இது சரியல்லவே என்று ஒரு திடீர் சிந்தனை. அப்போதிருந்து மாமிசம் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு முழுவதுமாக தாவர உணவுக்கு மாறினார். இது அவருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

இன்னொரு நாள் அவர் தியானம் செய்துகொண்டு இருந்தபோது, அவர் எந்த மரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தாரோ, அந்த மரம் அவர் பார்த்த எந்த விலங்கையும்விட, எந்தத் தாவரத்தையும்விட மிகவும் உயிரோட்டமாக இருப்பதை உணர்ந்தார். நான் இன்னும் தவறு செய்கிறேனே. இந்த மரத்திலிருந்து பழத்தைப் பறித்துச் சாப்பிடுகிறேன். இதைச் செய்ய எனக்கு என்ன உரிமை இருக்கிறது? என்று நினைத்தார். அப்புறமென்ன, காய்கறிகளையும் பழங்களையும் உண்ண மறுத்தார். பழம் தானாகக் கீழே விழும் வரை காத்திருந்து, அதன் பிறகே அந்தப் பழத்தை எடுத்துச் சாப்பிட்டார். பழம் விழவில்லையென்றால் அவர் சாப்பிட மாட்டார். காய்கறிகள் உயிர்ப்போடு இருக்கும்போது அவற்றைச் சாப்பிடமாட்டார். அவை அழுக ஆரம்பித்த பிறகே சாப்பிடுவார்.

> **விலங்கு, தாவரம் இரண்டுக்கும் இடையே எந்த வேறுபாடும் இல்லை. நீங்கள் விலங்கைத் துன்புறுத்தினாலும் தாவரத்தைத் துன்புறுத்தினாலும் இரண்டு உயிர்களுக்கும் வலியும் பாதிப்பும் ஒரே விதமாகத்தான் இருக்கும். உயிரைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமானால் எதையாவது கொன்றே ஆகவேண்டும்.**



இப்படியே சில காலம் கடந்தது. ஒரு நாள் அழுகிய காய் ஒன்றை விழிப்புணர்வுடன் சுவைத்துக் கொண்டு இருந்தார் மகாவீரர். அப்போது அந்த அழுகிய காய்கறி மிகவும் உயிர்ப்புடன் இருப்பதைச் சட்டென உணர்ந்தார். அவ்வளவுதான்... இதுவும் இனி வேண்டாம் என எல்லாம் துறந்து பட்டினியாய் இருக்க ஆரம்பித்தார்.

12 வருடங்களில் 11 வருடங்கள் அவர் உண்ணா விரதம் இருந்தார். அதாவது 11 நாட்கள் சாப்பிடமாட்டார். 12வது நாள் ஒருவேளை உணவு மட்டும் சாப்பிடுவார். மீண்டும் 11 நாட்கள் சாப்பிடமாட்டார். 12வது நாள் உயிரைத் தக்கவைத்துக் கொள்வதற்காக மட்டுமே அந்த ஒருவேளை உணவையும் சாப்பிடுவார். இப்படி 12 வருடங்களில் 11 வருட காலம் அவர் சாப்பிடவே இல்லை.

மகாவீரரின் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டது. பிறகு ஒருநாள், 'தனக்குள்ளும் உயிர் இருக்கிறதே, மற்ற உயிர்களைக் காப்பாற்றுவதற்காக இந்த உயிரை மிகவும் துன்பப்படுத்துகிறோமே! என்று உணர்ந்தார். அதன் பிறகே வழக்கம்போல உணவருந்த ஆரம்பித்தார்.

இப்போது கேள்வி வருகிறது... எதை நாம் உண்ணலாம். எதைத் தவிர்க்க வேண்டும் என்று நாம் உயிர் வாழ, எதையாவது கொன்றுதான் சாப்பிட்டாக வேண்டும். வாழ்க்கையின் தன்மை அப்படித்தான் இருக்கிறது.

தாவரங்களின் தன்மையைவிட விலங்கின் தன்மை மனிதனுக்கு நெருக்கமாய் இருப்பதால்தான், விலங்குகளைத் துன்புறுத்துவதை 'அஹிம்சை' என்றும் கருதுகிறோம். ஏனெனில் விலங்குகள் நம்மைப் போல் வாழ்கின்றன. நீங்கள் என் கையை அறுத்தால் ரத்தம் வருகிறது. ஒரு கோழிக்குஞ்சை அறுத்தாலும் ரத்தம் வருகிறது. அதனால்தான் நாம் விலங்கின் தன்மைக்கு நெருக்கமாய் இருப்பதாகக் கருதிக்கொள்கிறோம். உணர்ச்சியின் அடிப்படையில் நாம் அப்படி நினைத்துக் கொள்கிறோம். ஆனால் உண்மையில் விலங்கு, தாவரம் இரண்டுக்கும் இடையே எந்த வேறுபாடும் இல்லை. நீங்கள் ஒரு விலங்கைத் துன்புறுத்தினாலும் தாவரத்தைத் துன்புறுத்தினாலும் அந்த இரண்டு உயிர்களுக்கும் வலியும் பாதிப்பும் ஒரே விதமாகத்தான் இருக்கும்.

இந்த உயிரைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமானால் எதையாவது கொன்றே ஆக வேண்டும். ஒவ்வொரு நாளும், நீங்கள் உயிரைத் தக்க வைத்துக் கொள்வதற்காக கோடிக்கணக்கான உயிரினங்கள் இறக்கின்றன. பல தாவரங்கள், கண்களால் பார்க்க முடியாத மிகச் சிறிய உயிரினங்கள் உங்களுக்காகவே இறக்கின்றன.

இப்போது செய்ய முடிவது ஒன்றுதான். சாப்பிடுவதையாவது நன்றியுணர்வுடன் சாப்பிடலாம். உணவின் ஒவ்வொரு கவளத்தையும் நன்றியுணர்வுடன் சாப்பிட வேண்டும். ஆம், நன்றியுணர்வுடன் சாப்பிட்டு பாருங்கள். என்ன சாப்பிட்டாலும் அது உடலுக்கு ஆனந்தமாக இருக்கும்.

உடலுக்குத் தேவையான அளவு மட்டும் சாப்பிடுங்கள். சிறப்பான உடல் நலத்துடன் இருப்பீர்கள். இந்த அணுகுமுறை ஒரு சிறந்த மாற்றத்தைக் கொண்டுவரும். பல உயிர்கள் நமக்காக இறக்கின்றன. சிறிதாவது நாம் நன்றியுணர்வுடன் இருக்க வேண்டாமா? நமக்காக உயிர்விடும் உயிரினங்களுக்காக சிறிதாவது உணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும்தானே, நன்றியுணர்வுடன் சாப்பிடுங்கள், நம்மால் செய்ய முடிந்தது அதுதான்.

## பாரதியார் பல்கலையில் கொரோனா தடுப்பூசி முகாம்

தி கோவை மெயில்

பாரதியார் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை ஆகியவை இணைந்து நடத்திய, இலவச கொரோனா தடுப்பூசி முகாம், பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

இம்முகாமை பல்கலைக்கழகத் துணைவேந்தர் காளிராஜ் தொடக்கி வைத்தார். எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை தலைமை செயல் அலுவலர் ராம்குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்த முகாமில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், நிர்வாகப் பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு முதல் மற்றும் இரண்டாம் தவணை தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டனர்.

இம்முகாமில் பாரதியார் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் அண்ணாதுரை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் பிரகதீஸ்வரன், நாகராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து பத்தாவது முறையாக நடைபெற்ற முகாமில் இதுவரை சுமார் 3000 பேர் முதல் மற்றும் இரண்டாவது தவணை கொரோனா தடுப்பூசி செலுத்தியுள்ளது குறிப்பிடதக்கது.

## கழிவுகளை அகற்ற மனிதர்களை பயன்படுத்த மாட்டோம் என உறுதி அளியுங்கள்

**- சென்னை உயர்நீதிமன்றம்**

தி கோவை மெயில்

வெளிநாடுகளில் தானியங்கி இயந்திரங்கள் மூலமாக மனித கழிவுகள், சாக்கடைகளை சுத்தம் செய்யும் பணிகள் செய்யப்படுகின்றன. ஆனால் இந்தியாவில் பல ஆண்டு காலமாக மனித கழிவுகளை மனிதர்களே அள்ளும் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என பல தரப்பில் இருந்தும் கோரிக்கைகள் வைக்கப்பட்டு வருகின்றது.



நாடு முழுவதும் கையால் மலம் அள்ளும் தொழில் மற்றும் சாக்கடைகளை சுத்தம் செய்யும் பணிகளை செய்ய சுமார் 2 லட்சம் குடும்பத்தினர் உள்ளதாக கூறப்படுகிறது. நாட்டில் தொழில் நுட்பங்கள் எவ்வளவு தான் வளர்ந்து விட்டாலும், மனிதக் கழிவுகளை அகற்றும் பணியில் இன்னமும் பல இடங்களில் மனிதர்கள் தான் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், ஏராளமானோர் விஷவாயு உள்பட பல்வேறு விபத்துகளிலும் சிக்கி உயிரிழந்து வரும் அவலங்களும் அரங்கேறி வருகின்றன.

துப்புரவுத் தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்தப் பணியாளர்கள் என சேர்த்து தமிழகத்தில் சுமார் 50 ஆயிரம் பணியாளர்கள் பணிபுரிவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களைக் கொண்டு, கழிவுநீர்க் குழாய்கள் மற்றும் தொட்டிகளுக்குள் மனிதர்களை இறக்கி வேலை வாங்கக் கூடாது என உத்தரவிடப்பட்டிருந்தாலும், அதிகாரிகள் மனிதர்களைக் கொண்டே பணிகளை செய்து வருகின்றனர்.

கடந்த 2013ம் ஆண்டு முதல் டிசம்பர் 2018 வரை நாடு முழுவதிலும் 323 துப்புரவு தொழிலாளர்கள் இதுபோன்ற பணிகளின் போது உயிரிழந்துள்ளதாகவும், இதில் மிக அதிக அளவாக தமிழகத்தில் 144 பேர் பலியாகியுள்ளனர் என பாராளுமன்றத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில், மனித கழிவுகளை மனிதனே அள்ளுவதற்கு தடை விதிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பொதுநல வழக்கை விசாரித்து நீதிமன்றம் உத்தரவுகளை பிறப்பித்துள்ளது.

அதன்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் கமிஷனர்கள் தங்கள் எல்லைக்குள் மனிதர்களைக் கொண்டு சாக்கடை, மனிதகழிவுகளை துப்புரவு செய்ய அனுமதிக்க மாட்டோம், மனிதர்களைக் கொண்டு கையால் மலம் அள்ளும் தொழில் செய்ய அனுமதிக்க மாட்டோம் என எழுத்துப்பூர்வமாக உத்தரவாதம் தாக்கல் செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றம் அறியுறுத்தியுள்ளது.

கைமுறையாக துப்புரவு செய்யும் பணியின்போது விபத்து ஏற்பட்டால் அதற்கு, தனிப்பட்ட முறையில், மாநகராட்சி, நகராட்சி ஆணையர்களே பொறுப்பேற்க வேண்டும்.

சாக்கடைகளை சுத்தம் செய்ய இயந்திரங்கள் வாங்கப்பட வேண்டும் மற்றும் கைமுறையான துப்புரவுப்பணியை தடுப்பதற்கான முக்கியமான வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக அரசு 6 வாரங்களுக்குள் அமைக்க வேண்டும் என்றும் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## கனவும்... நம்பிக்கையும்...!



தி கோவை மெயில்

நம் மனதினுள் அடைத்து வைக்கப்பட்ட உணர்ச்சிகளே இரவு நேரங்களில் கனவாக தோன்றுகின்றன என உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். அவ்வாறாக தோன்றும் கனவுக்கும், எதிர்காலத்தில் நடக்க போகும் நிகழ்வுகளுக்கும் தொடர்புண்டு என பெரும்பாலான மக்கள் நம்புகின்றனர். இந்த நம்பிக்கை இப்போது மட்டுமில்லை, சங்ககாலத்தில் இருந்தே கனவு குறித்தான நம்பிக்கைகள் நிலவி வருகிறது. பிறரிடம் கண்ட கனவினை சொல்ல முற்படும்போது நமது நினைவில் துல்லியமாக அவை பதியாத காரணத்தினால் விரிவாக கூட நம்மால் சொல்ல முடியாது.

கனவில் தோன்றுகின்ற விஷயங்களின் அடிப்படையில் நல்ல கனவு, கெட்ட கனவு என பாகுபடுத்தப்படும். அதிலும் வேடிக்கையான நிகழ்வு என்னவென்றால் நம் கனவில் நல்லது நிகழ்ந்தால் வாழ்க்கையில் அதற்கு நேர்மாறாகத் தீயது நடக்கும். கனவில் தீயது நிகழ்ந்தால் வாழ்க்கையில் நல்லது நடக்கும். இது கனவு நம்பிக்கைகளுக்கு உரிய தன்மையாக கருதப்படுகிறது. திருமணம் பற்றிக் கனவு வந்தால் தீயது நடக்கும், கனவில் தாமே இறந்துவிட்டதாகக் கனவு கண்டால் ஆயுள் பெருகும், மரணத்தைக் கனவில் கண்டால் சுகமாகும் என கனவு குறித்த நம்பிக்கைகளோ ஏராளம்.

அனுபவ ரீதியிலான நிகழ்வுகளின் வாயிலாக, கனவுகளைக் குறித்த பல்வேறு கற்பிதங்கள் வழிவழியாக, நம் சமூகத்தில் உலா வருகிறது. இந்த நம்பிக்கைகள் அனைத்தும் ஒருபுறம் இருந்தாலும் அதைப் பற்றிய புரிதல்கள் அவசியமாகின்றன.

"கனவுகள் கடவுளாலோ, கடவுள் தன்மை உடையவர்களாலோ ஏற்படு பவை அல்ல. மனித உள்ளத்தில் இயல்பாகத் தோன்றுவனவே" என்கிறார் அரிஸ்டாட்டில்.

மனம் பெரும்பாலும் எதைப் பற்றி அதிகம் சிந்திக்கிறதோ, அந்த எண்ணங்களின் பிரதிபலிப்பு, சிதறல்கள், இரவில் அவர்களுக்கு கனவாக வருகிறது என மன நல மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். நாம் காணும் கனவுக்கும், வயதிற்கும் சம்பந்தம் உண்டு. குழந்தைகளுக்கு பெரும்பாலும் அவர்களைப் பெரிதும் ஈர்க்கும் கார்ட்டூன் உருவங்கள் மற்றும் திரைப்படங்களில் வரும் கதாநாயகன், வில்லன் போன்ற கதாபாத்திரங்கள் கனவில் வரும்.

இளமைப் பருவத்தில் இயல்பாகவே மனம் ஒரு இடத்தில் நிலைக் கொள்ளாது. ஆசைகள் அலை மோதிக்கொண்டிருக்கும். இந்தப் பருவத்தினருக்கு தங்களுக்கு பிடித்தமான, எதிர் பாலினரே அதிகம் கனவில் வருவர். பிள்ளைகளின் எதிர்காலம், வேலை வாய்ப்பு, திருமணம் பற்றி அதிகம் எண்ணும் நடுத்தர வயதினருக்கு இது தொடர்பான, நேர்மறை அல்லது எதிர்மறையான கனவுகள் வரும்.

உளவியல் ரீதியாக பல காரணங்கள் சொல்லப்பட்டாலும், மனித மனம் கனவின் மீது கொண்டுள்ள சில நம்பிக்கைகள் நிகழ்காலத்திலோ, வருங்காலத்திலோ பொருத்திப் பார்க்கக் கூடிய ஒன்றாகவே கருதப்படுகிறது.

## சூழல் தொடர்

### நல்லா இருக்கீங்களா?

நம்ம ஊரில் யாரையாவது பார்த்தால் "நல்லா இருக்கீங்களா?" என்று கேட்பது வழக்கம். அது நமது பண்பாடு. ஆனால் இன்று நிலைமை வேறு. நாம் மட்டும் இந்த பூமியில் தனியாக நல்லா இருந்து விட முடியாது. நம்மைச் சுற்றி இருக்கிற அனைத்தும் நல்லா இருக்க வேண்டும். நாம் குடிக்கின்ற தண்ணீர் நல்லா இருக்க வேண்டும். நமது நதிகள் நல்லா இருக்க வேண்டும். இப்படியே உலகம் முழுவதும் நல்லா இருந்தால் தான் நாமும் "நல்லா இருக்க முடியும்". ஏனென்றால் எங்கோ ஒரு மூலையில் உள்ள சீனாவின் வூஹான் நகரில் சில பேருக்கு வந்த "கொரோனா வைரஸ்" அவர்களை நல்லா இருக்கவிடவில்லை. அங்கிருந்து கிளம்பி உலகெங்கும் சுற்றுப் பயணம் செய்து அழையா விருந்தாளியாய் பல நாடுகளுக்கும் வந்து ஜம் என்று உட்கார்ந்து கொண்டு, போகாமல் அடம் பிடிக்கிறது. நாமும் பல ஆயிரம் பேரை பலி கொடுத்திருக்கிறோம்.

இன்னும் ஒரு பக்கம் அது தொடர்ந்து கொண்டே இருக்கிறது. வூஹான் நல்லா இருந்திருந்தால் நாமும் நல்லா இருந்திருப்போம். உலகம் இன்று சுருங்கி விட்டது, உள்ளங்கையில் உலகம் என்று எல்லாம் பேசியது, வேறு வகையில் நமக்கு வேட்டு வைத்துவிட்டது. விமானம், ரயிலில் எல்லாம் கோவிட் 19 வந்து இறங்குகிறது. அன்று கர்ணனுக்கு கவச குண்டலம் போல இன்று நமக்கு முகக்கவசம், தடுப்பூசி, சானிடைசர் ஆகிவிட்டது. இது கொரோனாவுக்கு மட்டும் அல்ல, உலகமே இன்று சுற்றுசூழல் சீர்கேட்டால் சிக்கி தவிக்கிறது.

காற்று மற்றும் நீர் மாசுபாடு, காலநிலை மாறுதலால் இன்று மனிதர்களோடு பல்வேறு உயிரினங்களும் கடுமையாக பாதிக்கப்படுகின்றன. பஞ்சாபில் கோதுமை வயலில் அறுவடைக்குப் பின் தீ வைத்தால் புகை கிளம்பி, டில்லியில் குழந்தையின் நுரையீரல் பாதிக்கிறது. நூறு ஆண்டு வராத மழை ஒரே நாளில் கொட்டுகிறது. ஆங்காங்கே காட்டுத்தீ பற்றி எரிகிறது. இதற்கெல்லாம் ஏதாவது ஒரு குறிப்பிட்ட பொதுக் காரணம் இருக்கிறதா என்று பார்த்தால் கண்டிப்பாக இருக்கிறது. அது தான் சுற்றுச்சூழல் சீர்கேடு. அதனால் வந்தது தான் தற்போது ஏற்படும் பல சிக்கல்களும், பாதிப்புகளும் என்றே கூறலாம்.

இதற்கு முன்பு வெள்ளம் வரவில்லையா, காட்டுத்தீ எரியவில்லையா என்று கேட்கலாம். ஆனால் கடந்த இரு பத்தாண்டுகளைப்போல எப்போதும் முறை தவறி மழையும் பெய்ததில்லை, வர்தா, கஜா என்று புயல் வாரிச் சுருட்டியதும் இல்லை, மற்ற நாடுகளில் அமெரிக்கா, துருக்கி, கிரீஸ், ஆஸ்திரேலியா என்று காட்டுத் தீயும், சீனா தொடங்கி பல நாடுகளில் வெள்ளம் புயல் என்று இயற்கை கொந்தளித்ததும் இல்லை.



உலகெங்கும் உள்ள நாடுகள் இதுகுறித்து தொடர்ந்து மாநாடுகள் நடத்தி, தீர்மானங்கள் நிறைவேற்றி வருகின்றன. சுற்றுச்சூழல் குறித்த பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. சூழலியல் அறிஞர்களும், ஆர்வலர்களும் கடுமையாக போராடி வருகின்றனர் என்றாலும் வளர்ச்சியின் பெயரால் நடைபெறும் பல்வேறு நடவடிக்கைகள், இயற்கைக்கு எதிரானதாக சுற்றுச் சூழலுக்கு பாதகமாகத் தான் இருக்கின்றன. உலகெங்கும் நாகரீகத்தின் மையமாக இருந்த நதிகள் இன்று கழிவுநீரைச் சுமந்து செல்லும் ஓடைகளாக பல இடங்களில் காட்சி தருகின்றன. இன்னொருபுறம் குடிக்க நீரின்றி மக்கள் கூட்டம் அலைகிறது. வழக்கம் போல தண்ணீரை விற்று காசாக்குவதும் நடைபெறுகிறது. இந்த நிலையில் திரும்பிய பக்கம் எல்லாம் சூழல் சீரழிவு என்று கூறாமல், நம்மால் முடிந்ததைச் செய்யும் மக்கள் கூட்டமும் இருக்கிறது.

தனிநபராக நாமும், அமைப்புகளாக நிறுவனங்கள் தொடங்கி, அரசாங்கம் வரை இந்த சுற்றுச் சூழலை பாதுகாக்க என்ன செய்ய முடியும், தற்போதைய சூழலியல் சிக்கல்கள் என்ன அவற்றை சீர்செய்வது எப்படி என்று அலசுவதே இந்த தொடரின் நோக்கம்.

ஒரு காலத்தில் இலவசமாக, இயல்பாக கிடைத்து வந்த குடிநீர் இன்று விலையுள்ள பொருளாகி உள்ளது. அதை அனைத்து மக்களுக்கும் அடிப்படை உரிமையாக வழங்கி வந்த அரசின் பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சி, உள்ளாட்சி போன்ற அமைப்புகள் இன்று தனது கடமையைச் செய்ய முடியாமல் சிக்கித் திணறி வருகின்றன.

கோவை போன்ற இடங்களில் ஒருபடி மேலே போய் அடிப்படைத் தேவையான குடிநீர் வழங்கல் ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்திருப்பதாக செய்திகள் வருகின்றன. நகர அமைப்பு என்பது பல இடங்களில் நரக அமைப்பாக மாறிவருகிறது. குடிநீர் வழங்குதல் தொடங்கி கழிவுநீர் வெளியேற்றம் வரை பல சுற்றுச்சூழல் சிக்கல்கள் இருக்கின்றன. அதிலிருந்து வெளியேற முடியாமல் உள்ளாட்சி அமைப்புகள் விழிபிதுங்கி நிற்கின்றன.

இது நாள் வரை இருந்து வந்த, நமது இயற்கை சார்ந்த பண்பாட்டு வாழ்க்கை முறை மாறி நுகர்வோர் கலாச்சாரமாக வளர்ந்து இன்று கடன் வாங்கியாவது பொருள் குவிக்கும் சமூகமாக வளர்ந்து நிற்கிறோம். கழிப்பிட வசதியை விட கலர் டிவி வாங்குவது நோக்கமாக இருக்கிறது. இயற்கையை ஒட்டி அனுசரித்து வாழ்வதே உண்மையான வாழ்க்கை முறையாகும். அதனை எதிர்த்து வாழ முற்படுவது நடைமுறையில் சாத்தியமே இல்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்த பூமி நமது முன்னோர் நமக்கு நல்ல முறையில் வாழ்வதற்காக கொடுத்தது. அதனை அப்படியே, பாதுகாப்பாக அடுத்த தலைமுறையிடம் ஒப்படைக்க வேண்டியது நமது கடமையாகும்.


HONDA
ACTIVA 6G
6 கேமையே மாற்றியுள்ளது
ஹோண்டா வழங்குகிறது
ஆடி மகா உற்சவம்
Ex-Showroom Price
₹72269/-*
முன்பணம் ₹2100/-*
நிதியுதவி 100%*
சேமியுங்கள் SBI CREDIT CARD ₹3500/-* வரை
joyclub பயன்கள் ₹2100/-*
சுமார் இருபது ஆண்டுகளாக, Activa இந்தியன் ஸ்கூட்டரிங் துறையின் கேம்ஐ மாற்றியுள்ளது. Activa 6G-ல் சமீபத்திய தொழில்நுட்ப புதுமை மீண்டும் ஒட்டுமொத்தமாக ஸ்கூட்டரிங் உலகையே மாற்றியுள்ளது. முற்றிலும் புதிய Activa 6G மற்றும் அதன் புதிய BS-VI இன்ஜின் மூலம் ஹோண்டா ஒரு பிரமாதமான கேம் சேஞ்சிங் 6 சாதித்துள்ளது!
டெலிஸ்கோபிக் சஸ்பென்ஷன்
eSP ENHANCED SMART POWER
கேமை மாற்றும் அம்சங்கள்
சைலன்ட் ஸ்டார்ட் ACG உடன்
10% அதிக மைலேஜ்
LED DC ஹெட்லாம்ப்
BOOK ONLINE NOW!
www.honda2wheelersindia.com
CLICK BOOK RELAX
Honda 2Wheelers
ஓர் அமைதிப் புரட்சி
HET BS-VI
PGM-FI FUEL INJECTION
BEST DEAL HONDA Buy. Sell. Exchange
joyclub
ALWAYS WEAR A HELMET WHILE RIDING
3+3
Follow us on
Honda Motorcycle and Scooter India Pvt. Ltd., Registered Office: Commercial Complex II, Sector - 49-50, Golf Course Extension Road, Gurugram - 122018 (Haryana), India; Website: www.honda2wheelersindia.com; Customer Care: customercare@honda2wheelersindia.com
சந்திரா ஹோண்டா
மேட்டுப்பாளையம் ரோடு, கோவை.
99945 00077, 82200 45783
பிரசன்னா ஹோண்டா
அவினாசி ரோடு, கோவை.
70944 65155, 98430 27903
சூர்யபாலா ஹோண்டா
திருச்சி ரோடு, கோவை.
97874 66628, 97894 66211
ஆதி ஹோண்டா
சத்தி மெயின் ரோடு, கணபதி, கோவை.
77088 07000, 77088 05000
கமலம் ஹோண்டா
சுந்தராபுரம், சிட்கோ அருகில், கோவை.
96552 04004, 83001 31234